ISSN 2792-1050

# வெண்ணிலா

காலாண்டிதழ்.
QUARTERLY.

වෙණ්ණිලා
VENNILA

கவிதை மஞ்சரி.
Poetry Inflorescence.

## காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.

15 காவியங்கள்
(சுமார் 14,200 செய்யுள்கள்)
8 கவிதைத் தொகுதிகள்
(சுமார் 3,200 கவிதைகள்)
5 சிறுவர் இலக்கியங்கள்
2 சிறுகதைத் தொகுப்புகள்
2 நாவல்கள்
2 மொழிமாற்றல்கள்

மொத்தம்:
**34**
நூல்கள்.



16

இதழ்: 16. ஜனவரி-மார்ச் 2025. ரூபா. 150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TYPESETTING
GRAPHIC DESIGNING
PHOTOCOPY
OFFSET PRINTING
DIGITAL PRINTING
LAMINATING
BINDING
&
MUCH MORE SERVICES
at Cheapest rates.

Jesa Grafix
FINEST CREATIVE & PRINTING SOLUTION
| PHOTOCOPY | PRINT | SCAN |
075 656 9393

No. 281, Main Street, Maruthamunai
jesagrafix24@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டிதழ்

# வெண்ணிலா

වෙණ්ණිලා - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

ISSN 2792-1050

நான்காவது ஆண்டு - இதழ்: 16 ஜனவரி-மார்ச் 2025.

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

**ஆசிரியர்:**
கவிஞர் எஸ் ஏ கப்பார்
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
இலங்கை.

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com

**தொடர்பு** : 077 6968 697
**வட்ஸ்அப்** : 077 6968 671

**தகவல் தொழிநுட்பம்:**
ஏ. ஜி. அப்ரான் முஹம்மத்
(ருகுணு பல்கலைக்கழகம்)

**அட்டை, பக்க வடிவமைப்பு:**
எஸ். ஏ. அப்துல் கப்பார்
abdulgaffar9@gmail.com

**அச்சு:**
எஸ். ஏ. ஜெஸீம்
ஜெஸா கிரபிக்ஸ், மருதமுனை.

**வெளியீடு:**
டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம்
தொடர்பு: 07 5858 5656

**படங்கள்:**
நன்றி - கூகிள்.

**Editor:**
**Poet S. A. GAFFAR**
kavignarsagaffar@gmail.com

**Address:**
378/2, Zam Zam Road,
Maruthamunai-03 # 32314
Sri Lanka.

**Email:**
vennilakavithaimanjari@gmail.com

**Contact** : 077 6968 697
**WhatsApp** : 077 6968 671

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Cover Design & Page Layout:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC.
abdulgaffar9@gmail.com

**Print:**
S. A. Jezeem
Jesa Grafix, Maruthamunai.

**Published by:**
Digital Information System (DIS)
Contact: 07 5858 5656

**Images:**
Thanks to Google.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


**ஆசிரியரிடமிருந்து: (5)**
- சிறந்த சஞ்சிகைக்கான விருது.

**அட்டைப்படக் கட்டுரை: (6-15)**
- காப்பியக்கோ டாக்டர் அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.

**அட்டைப்படக் கவிதை: (16-17)**
- முத்தமிழ் வித்தே மூவா மருந்தே!
- கவிஞர் மருதமுனை ஹஸன்.

**இரங்கல்: (18-23)**
- எழுத்தாளர் வேதாந்தி
- எழுத்தாளர் மு. பொன்னம்பலம்
- எழுத்தாளர் காத்தான்குடி பௌஸ்

**சிறப்புப் பார்வை: (24-28)**
- நீலவான ஓடையில்...
- கலாபூஷணம் எம். எம். மன்ஸூர்

**நாமும் அறிவோம்: (30-31)**
- பனியாறு

**நூல் நயம்: (32-40)**
- திருப்பம்.
- அஷ்ரபா நூர்தீன்
- மனதின் மாயம்
- முஜாமலா
- அப்பாவின் டயரி
- முஜாமலா

**சிறுகதைகள்: (41-59)**
- வலியால் நனைந்த விழி
- எச். டீ. எச். பஹ்தா
- உம்மா சும்மா இல்லை
- நயீமா சித்தீக்
- தடம் மாறாப் பயணம்
- கிண்ணியா சபீனா.
- மறுமணம்
- ஏ. எஸ். சித்தி மிஸ்ரியா அமீன்

**கட்டுரை: (48)**
- கருத்துச் சுதந்திரம்
- நழீம் ஹனீபா, ஒலுவில்

**புதிய வரவு: (49)**
- அனர்த்தங்களும் நாமும்
- றாசிக் நபாயிஸ்

**புத்தாண்டுக் கவிதை: (60)**
- புத்தாண்டே வருக
- தம்பிலுவில் ஜெகா

**மொழிபெயர்ப்புக் கவிதை: (61)**
- மறக்க முடியுமா
- மாவனல்லை எம். எம். மன்ஸூர்

**தடம்பதித்த மூத்த கவிஞர்: (62-63)**
- நன்றி மறந்தீர்
- கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்.

**மஞ்சரி கவிதைகள்: (64-75)**
- ஏ. எம். கஸ்புள்ளா
- Dr. ஜலீலா முஸம்மில்
- சம்மாந்துறை மஷூறா
- எம். ஏ மாஹிறா
- எச். டீ. எச். பஹ்தா
- ஆஷிக் ஹுசைன்
- முல்லை அமுதன்
- செண்பகச் சோலையாள் ஆய்ஷ்
- மாஹிறா ஹமீட் அஸ்ஹர்
- ஒலுவில் நழீம் ஹனீபா
- முபீதா அமீன்

**படித்தவற்றில் பிடித்தவை: (76-79)**
- சோலைக்கிளி
- தீரன்
- சினேகா மணிவேல்
- செ. இராமதனவந்தினி

**உங்களிடமிருந்து: (80-82)**
- வாசகர் பதிவுகள்.
- டீன் கபூர்
- றாசிக் நபாயிஸ்
- சித்தி மிஸ்ரியா அமீன்
- ஒலுவில் நழீம் ஹனீபா
- அபூ முஜாஹித்
- ஏ. எம். கஸ்புள்ளா
- எம். ஐ. எம். முஸாதிக்
- கவிமணி அப்துல் றஸாக்

**சந்தா விபரம்:**
**பக்கம்: 29ஐப் பார்க்கவும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலாவுக்கு சிறந்த சஞ்சிகைக்கான விருது.

## கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - 2023.

**வெண்ணிலா** தனது ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இத் தருணம், கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கடந்த 11-12-2024 திருகோணமலை, இந்து கலாசார மண்டபத்தில் நடாத்திய 2022, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா - 2024 மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில், விருதுபெற்றோருக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்த கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர அவர்களால், நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. H.G.M.W.G. திஸாநாயக்க, சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. R.M.P.S. ரத்நாயக்க, பல்வேறு அமைச்சுகளின் செயலாளர்கள், உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திரு. சரவணமுத்து நவநீதன், அனைத்து கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் முன்னிலையில் விருதும் பாராட்டும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவ் விருது விழாவில், கிழக்கு மாகாணத்தில் 2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நூல்களில் **இலக்கிய சஞ்சிகைத் துறையில்** சிறந்த படைப்பாகத் தெரிவு செய்யப்பட்ட **வெண்ணிலா (கவிதை மஞ்சரி)** சஞ்சிகைக்கு சிறந்த சஞ்சிகை விருதும் பாராட்டும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

**வெண்ணிலா**வின் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு தந்து ஆக்கங்களை வழங்கிவரும் கவிஞர்கள், கட்டுரையாளர்கள், கதை சொல்லிகள், விமர்சகர்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் விளம்பர அனுசரணையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், மருதமுனை ஜெஸா கிரபிக்ஸ் அச்சகத்தினர், அடிக்கடி உரமூட்டி வளர்த்தெடுத்த வாசகர்கள், குறிப்பாகச் சந்தாத்தாரர்கள் போன்ற அனைவருக்கும் **வெண்ணிலா** தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் மட்டில்லா மகிழ்ச்சியடைவதோடு இவ் விருதினையும் சமர்ப்பணம் செய்கிறது.

தொடர்ந்தும் இவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என்ற பெரும் எதிர்பார்ப்புகளுடன்!

உங்கள் அன்பின் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படக் கட்டுரை.

### மருதமுனை மண்ணுக்கு மகிமை சேர்க்கும் காப்பியக்கோ

# டாக்டர் அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன்.

கிழக்கிலங்கை, அம்பாறை மாவட்டம் மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள், நாடறிந்த அறிஞரும் புலவருமான புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன், ஆயிஷா உம்மா தம்பதிகளின் புதல்வராக 01-09-1943இல் பிறந்தவர். இவர் 9 பெண் சகோதரிகளுடனும், 8 சகோதரர்களுடனும் கூடப் பிறந்தவர்.

தமிழ் இலக்கியத்துறையில் நன்கு அறியப்பட்ட காப்பியக்கோ அவர்கள் கவிதை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், மொழிமாற்றுப் படைப்புகள் எனப் பல துறைகளிலும் ஈடுபட்டுவரும் ஓர் இலக்கியவாதியும், தொழில் ரீதியாக ஒரு மருத்துவருமாவார். இவருக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

தந்தையிடமிருந்து முறையாக யாப்பிலக்கணத்தைக் கற்றுத் தேறி தமிழ்ப் புலமைக்கு நேர் நிற்பவர். தளை தட்டாமல், சீர் அறாமல், இலக்கண விதிகளில் பிறழ்வு இல்லாமல் செய்யுள்களையும் மரபுக் கவிதைகளையும் எழுத ஆரம்பித்த இவரது 'இறைவழி நடப்போம்' என்ற முதல் கவிதை 1970இல் தினபதி கவிதா மண்டலத்தில் வெளியானது. அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து எழுதிவரும் கவிஞர் அவர்கள், தான் பிறந்த நாட்டுக்கும் பிறந்த மண்ணுக்கும் உள் நாட்டில் மட்டுமல்ல அகிலமெல்லாம் மகிமை பெற்றுத்தரும் மகோன்னத படைப்பாளி என்றால் மிகையாகாது.




ஈழத்து இலக்கிய வரலாற்றில் மதிப்புக்குரிய உன்னத படைப்பாளி. இதுவரை 15 காவியங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8 கவிதைத் தொகுதிகள், 2 நாவல்கள், 5 சிறுவர் இலக்கியங்கள், 2 சிறுகதைத் தொகுப்புகள், 2 மொழிமாற்றக் கவிதைத் தொகுப்புகள் என 34 நூல்களைத் தந்துள்ளார். சுமார் 14,200 செய்யுள்கள், 3,200 கவிதைகள் யாத்துள்ளார். இன்னும் பல நூல்கள் அச்சுக்குத் தயாராக உள்ளன. பெற்ற பரிசில்கள் 30 இற்கும் மேல். பெற்ற கௌரவங்கள் 24 இற்கும் மேல். இலக்கிய உலகில் வகித்த பதவிகள் 16 இற்கும் மேல்.

இனம், மதம், வயது என்ற வித்தியாசம் பாராது எல்லோருடனும் அன்பாகப் பழகும் குணமுடையவர். கொழும்பிலிருந்து தனது பிறந்த மண்ணுக்கு வரும் போதெல்லாம் இலக்கிய உறவுகளைச் சந்தித்துக் கலந்துரையாடாமல் போவதில்லை. யாருடைய எழுத்திலும் குறை காண்பதில்லை. தட்டிக் கொடுத்து உயர்த்தி விடும் பண்பானவர். முதியவர் இளையவர் பாகுபாடு பாராது, இலக்கியம் சம்மந்தமாக எழும் சந்தேகங்களுக்கு ஆர்வமுடன் பதிலளிப்பவர்.



பெற்றோர்

81 வயதைக் கடந்தும் முகநூலில் தினமும் ஐந்து குறள்களை எழுதிப் பதிவிட்டு வரும் காப்பியக்கோ நோய் நொடிகளின்றி இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்ந்து மேலும் பல படைப்புகளை இலக்கிய உலகிற்கு தரவேண்டுமென வெண்ணிலா வாஞ்சையுடன் வேண்டிநிற்கிறது.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துணைவியுடன்.



திருமணத்தின் போது.



மருதமுனையைச் சேர்ந்த படைப்பாளிகள் சிலருடனான சினேகபூர்வக் கலந்துரையாடல். காலம்: 2014ஆம் ஆண்டு. இடம்: கவிஞர் மருதமுனை ஹஸன் அவர்களின் இல்லம்.

அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்):
**கவிஞர் விஜிலி, டாக்டர் ஜின்னா ஷரீபுத்தீன் மற்றும் அல்-மருதமுனை ஆசிரியர் எம். சி. எம். எம். அப்துல் காதிர் ஆகியோர்.** நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): **கவிஞர் அலறி, வெண்ணிலா ஆசிரியர் எஸ். ஏ. கப்பார், எழுத்தாளர் அம்றிதா றியாஸ், எழுத்தாளர் ஏ. ஆர். ஏ. ஹமீட், காலஞ்சென்ற எழுத்தாளர் என். எம். இஸ்மாயில் அதிபர், கவிஞர் மருதமுனை ஹஸன், கவிஞர் டீன் கபூர், கவிஞர் ஜமீல், கவிஞர் தமீம் மற்றும் கவிஞர் குர்ஷித் மஜீத் ஆகியோர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் வெளிவந்த நூல்கள்:**



**காவியங்கள்:**

1. மஹ்ஜபீன் காவியம் - *1992*
2. புனித பூமியிலே காவியம் - *1998*
3. பிரளயங் கண்ட பிதா குறுங்காவியம் - *2001*
4. தாய்க்கென வாழ்ந்த தனயன் குறுங்காவியம் - *2001*
5. பண்டார வன்னியன் காவியம் - *2005*
6. திருநபி காவியம் - *2006*
7. தீரன் திப்பு சுல்தான் காவியம் - *2010*
8. வாத்தியார் மாப்பிள்ளை காவியம் - *2011*
9. எல்லாள காவியம் - *2013*
10. நாயனொடு வசனித்த நந்நபி - மூஸா நபி காவியம் - *2014*
11. அன்னை கதீஜாவும் அண்ணலார் குடும்பமும் காவியம் - *2016*
12. மைவண்ணன் - இராமாயண காவியம் - *2020*
13. கலீபா உமர் (ரலி) காவியம் - *2023*
14. அருட்கொடையின் அருட்கொடை -அன்னை ஆயிஷா காவியம் *2023*
15. இயேசு என்னும் ஈஸாநபி காவியம் - *2024*

**கவிதைத் தொகுதிகள்:**

1. முத்துநகை - *1989*
2. பாலையில் வசந்தம் - *1989*
3. பனிமலையில் பூபாளம் - மலையகக் கவிதைத் தொகுப்பு - *1995*
4. திருமறையும் நபிவழியும் - *2007*
5. வல்லுவம் - *2007*
6. இறையருள் மாலை - *2021*
7. விமர்சனப் பார்வையில் வாழும் எழில் காவியங்கள் - *2021*
8. ஜின்னாவின் குறும்பாக்கள் *550* - *2021*

**நாவல்கள்:**

1. கருகாத பசுமை - *2000*
2. முக்காழி - *2019*

**சிறுவர் இலக்கியம்:**

1. கடலில் மிதக்கும் மாடிவீடு - *2002*
2. அகப்பட்ட கள்வன் - *2003*
3. எங்கள் உலகம் - *2003*
4. ராகுலுக்கு ஒரு புதுவண்டி - *2008*
5. சிறுமியும் மந்திரக் கோலும் - *2010*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதைத் தொகுப்புகள்:**



1. பெற்றமனம் - 2003
2. வேரறுந்த நாட்கள் - 2008

**மொழிமாற்றக் கவிதைத் தொகுப்புகள்:**

1. அன்பின் கருணையின் பேரூற்று - 2010
2. கேள்வியும் பதிலும் - மஹாகவி இக்பாலின் ஷிக்வா ஜவாபே ஷிக்வா கவிதைகளின் மொழிபெயர்ப்பு - 2011

**பெற்ற பரிசில்கள்:**

1. 1980 தேசிய ஹிஜ்ரி கவிதைப் போட்டி (2ம் பரிசில்) கலாசார அமைச்சினால் நடத்தப் பெற்றது.
2. 1986 தேசிய மீலாத் விழா (1ம் பரிசில்) கவிதைப் போட்டி.
3. 1987 மலையகக் கலை இலக்கியப் பேரவை நடத்திய மரபுக் கவிதைப் போட்டி. (1ம் பரிசில்)
4. 1988 கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைத் தேர்வுப் பரிசில்.
5. 1989 கொழும்பு கலா மன்றம் நடத்திய நமது நாடும் தமிழும் கவிதைப் போட்டி. (2ம் பரிசில்)
6. 1989 புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஒருபா ஒருபஃது கவிதைப் போட்டி. (3ம் பரிசில்)
7. 1991 கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய அனைத்திலங்கை கவிதை உயர்நிலைத் துறைப் போட்டி. (1ம் பரிசில்) (முத்துநகை)
8. 1991 கலாசார அமைச்சினால் நடத்தப்பெற்ற சிறுகதைப் போட்டி (4ம் பரிசில்)
9. 1996 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய நாவற்குழியூர் நடராசன் கவிதைப்போட்டி. (4ம் பரிசில்)
10. 1998 வடகிழக்கு மாகாண சாஹித்ய மண்டலப் பரிசில் (புனித பூமியிலே காவியம்)
11. 1998 யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் (புனித பூமியிலே காவியம்)
12. 2000 தினகரன் பத்திரிகை, மலையக இலக்கியப் பேரவை இணைந்து நடத்திய அகஸ்தியர் நினைவுச் சிறுகதைப் போட்டி. (2ம் பரிசில்)
13. 2001 கலாசார அமைச்சு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் இணைந்து நடத்திய மீலாத் சிறுகதைப் போட்டிப் பரிசில் (2ம் பரிசில்)
14. 2002 யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் (ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள்)
15. 2005 கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசில் (பண்டார வன்னியன் காவியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. 2005 தேசிய சாஹித்ய மண்டலப் பரிசில் (பண்டார வன்னியன் காவியம்)



17. 2005 யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் (பண்டார வன்னியன் காவியம்)
18. 2006 யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் (திருநபி காவியம்)
19. 2010 தேசிய சாஹித்ய மண்டலப் பரிசில் (தீரன் திப்பு சுல்த்தான் காவியம்)
20. 2010 எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய தமிழியல் விருது (தீரன் திப்பு சுல்த்தான் காவியம்)
21. 2011 யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் (வாத்தியார் மாப்பிள்ளை காவியம்)
22. 2011 கிழக்கு மாகாண சாஹித்ய பரிசில் (வாத்தியார் மாப்பிள்ளை காவியம்)
23. 2011 தேசியசாஹித்ய மண்டலப் சான்றிதழ் பரிசில். (வாத்தியார் மாப்பிள்ளை காவியம்)
24. 2012 'வல்லுவம்' கவிதைத் தொகுதி (தமிழியல் விருது பெற்றது)
25. 2013 'எல்லாள காவியம்' தமிழியல் விருது பெற்றது.
26. 2013 'எல்லாள காவியம்' கிழக்கு மாகாண சாஹித்ய பரிசில் பெற்றது.
27. 2013 'எல்லாள காவியம்' யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில்.
28. 2019 சாகித்ய மண்டலச் சான்றிதழ் 'மைவண்ணன் காவியம்'
29. 2021 அவுஸ்த்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச்சங்கம் வழங்கிய பரிசில் (ரூபா 50,000) 'மைவண்ணன் காவியம்'
30. 2021 ஞானம் இலக்கியச் சஞ்சிகை முதல் பரிசில் 'மைவண்ணன் காவியம்'.

**பெற்ற கௌரவங்கள்:**

1. 1992 சென்னை தமிழ் இலக்கியப் பேரவையால் கவிஞர் வைரமுத்துவினால் மஹ்ஜபீன் காவியம் ஆய்வுரை செய்யப்பட்டு அவராலும், நாவலாசிரியர் ஹஸன் அவர்களாலும் பொன்னாடை போர்த்திக் கௌரவம் செய்யப் பெற்றது.
2. 1994 இலங்கை கலாசார அமைச்சு ஷம்ஸுல் ஷுஹாரா' (கவிக்கதிரோன்) பட்டமளித்துக் கௌரவம் செய்தது.
3. 1996 பண்டாரவளை இந்து மாமன்றம் 'கவிமாமணி' பட்டமளித்தது.
4. 1997 சென்னை தமிழகக் கவிஞர் கலைமன்றம் 1997ல் நடத்திய நான்காவது கவிஞர்கள் மாநாட்டில் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் மூலம் 'நற்கவிஞர்' பட்டயம் பெற்றமை.
5. 1999 ஆண்டு புதுச்சேரி கோட்டைக் குப்பத்தில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் 'தமிழ் மாமணி' விருது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6. 1999 இரத்தினபுரி சாமஸ்ரீ அமைப்பினால் 'காவியத்திலகம்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டமை.
7. 2003 மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் கௌரவித்தளித்த 'தமிழ் முஸ்லிம் நல்லுறவு விருது'.
8. 2005 ஆண்டுக்கான இலங்கைக் கலாசார அமைச்சின் 'கலாபூஷணம்' விருது.
9. 2006 கலாபூஷண விருது பெற்றமைக்காய்க் கொழும்புத் தமிழ்ச் சங்கம் அளித்த கௌரவம்.
10. 2006 தேசிய சாஹித்ய விருது பெற்றமைக்காய்க் கொழும்புத் தமிழ்ச் சங்கம் அளித்த கௌரவம்.
11. 2006 கல்முனை தடாகம் கலை இலக்கிய வட்டம் அளித்த 'கலைத்தீபம்' பட்டம்.
12. 2007 ஸ்ரீ லங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி வழங்கிய 'காப்பியக்கோ' விருது.
13. 2008 நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் தனது பவளவிழா நிறைவு விழாவில் அளித்த 'காவியக் கவிமணி' விருது.
14. 2008 துபாய் சங்கமம் தொலைக் காட்சி நிறுவனம் சார்பாய் அளிக்கப்பட்ட 'கவிச்சக்கரவர்த்தி' விருது.
15. 2010 தமிழ்நாடு பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம் அளித்த 'காப்பியக்கோ' விருது.
16. 2010 மன்னார் தமிழ்ச் சங்கம் அளித்த 'தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார்' விருது.
17. 2010 மேல்மாகாண தமிழ் சாகித்ய விருது 'கவியமிர்தன்'.
18. 2010 யாழ்ப்பாணம் திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அளித்த 'புலவர்மணி' விருது.
19. 2013 கம்பன் கழக 'மகரந்தச் சிறகு' விருது.
20. 2013 உமறுப் புலவர் ஞாபகார்த்த விருது (இந்தியா)
21. 2013 இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம் வழங்கிய 'சங்கச்சான்றோன்' விருது.
22. 2014 பாண்டிச்சேரி (இந்தியா) தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கிய 'செம்பணிச் சிகரம்' விருது.
23. 2017 தமிழ்நாடு பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம் அளித்த 'வாழ்நாள் சாதனையாளர்' விருது.
24. 2017 தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கம் அளித்த 'காவியப் பெரும்புலவர்' விருது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய உலகில் வகித்த பதவிகளும் வகிக்கும் பதவிகளும்:**



1. சிந்தாமணி கவிதாவட்டத் தலைவர்.
2. கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியச் செயலாளர்.
3. தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் நூண்ணாய்வுக் குழு உறுப்பினர்.
4. அரசாங்க மின்னியல் ஊடக ஆலோசனை சபை உறுப்பினர்.
5. கொழும்பு கம்பன் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்.
6. இந்திய இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இலங்கைப் பொறுப்பாளர்.
7. திருமறைக் கலா மன்ற ஆலோசனைக் குழு உறுப்பினர்.
8. கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர்.
9. கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர்.
10. இலங்கை கலாசார அமைச்சின் நுண்கலைப் பிரிவு உறுப்பினர்.
11. இலங்கை இஸ்லாமிய ஆய்வகத்தின் தலைவர்.
12. 2002ம் 2016ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்பட்ட உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவர்.
13. தேசிய நூல் அபிவிருத்திச் சபை உறுப்பினர்.
14. இலங்கை கல்வி அமைச்சினால் வழங்கப்பெற்ற இலங்கை ஜப்பான் சமாதான ஒன்றியப் பிரதிநிதித்துவம்.
15. திருமறைக் கலா மன்ற ஆளுனர் சபை உறுப்பினர்.
16. அகில இலங்கை கவிஞர்கள் மன்ற துணைத்தலைவர்.

●●●

---




'வெண்ணிலா' இதழ் 16இல் காப்பியக்கோ டாக்டர் அகமது ஜின்னாஹ் சரிபுத்தீன் அவர்களது நிழற் படத்தினை அட்டைப் படமாகப் பிரசுரித்து கௌரவிக்க இருப்பதாகக் கூறியதும், தனது தாய் மாமா பற்றிய தகவல்களைத் தந்துதவிய எனது நண்பர், **மரபுக் கவிஞர் நியாஸ் ஏ ஸமத்** (பொறியியலாளர்) அவர்களுக்கு மிக்க நன்றி.

- ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த மார்ச் 2024, ‘வெண்ணிலா’ நூலகத்துக்கு காப்பியக்கோ டாக்டர் அகமது ஜின்னாஹ் சரிபுத்தீன் அவர்கள் வழங்கிய அவரது சில நூல்களை வெண்ணிலா காரியாலயத்தில் வைத்து இலக்கியச் செயற்பாட்டாளரும் வருகைதரு சிரேஷ்ட விரிவுரையாளருமான **கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ்** அவர்கள் கையளித்த தருணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவட்டெச்சம்

– ஜின்னாஹ் சரிபுத்தீன்.

அலைவாய்க்கரையில்
பாதஞ் சுழற்றி
பன்னல் பிடித்தேன்.
அடம்பன்கொடியை
திரட்டியெடுத்து
அதில்பலம் பார்த்தேன்.
இராவணன் மீசை
காற்றில் பறக்க
அதனுடன் ஓடிநான்
வெற்றியும் பெற்றேன்.
கணவாயோடும்
சிப்பியும் பொறுக்கிக்
களிப்புற்றிருந்தேன்.
கடற்கரை மணலில்
கட்டிய வீடு
கடலலை கவர
கைகொட்டிச் சிரித்தேன்.
தோணா நீரில்
தோணிகள் விட்டேன்.
பால்ய வயதில்
மருதமுனையில்
மறக்கெணா நினைவுகள்
இன்றோ!
அன்னிய நாட்டின்
அடங்காக் குளிரில்
கடந்தகாலக்
கனவுகளோடு.
அட்டைபோல் சுருங்கி!
●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தே மூவா மருந்தே!

அலையெறி கடலரு காம்மரு தூரில்
குலக்கொடி ஆயிஷா குணவதி மடியில்
புலவர் மணிமக னாக மலர்ந்த
புலமைத் தமிழே பொன்னெழில் ஜின்னா

மருதூர் வானின் மஞ்சள் நிலாவே
முருகு மணங்கமிழ் மோகனப் பாவே
மாண்புறு புலவர் மணிமக னாரே
காண்பவர் கனியக் கதைதரு வாயே

பன்னிரு பேரர் படைசூழ் மன்னா
பன்னூல் ஆசான் பார்புகழ் ஜின்னா
இன்னும் ஆண்டுகள் இலக்கிய வானில்
மின்னும் தாரகைப் பொலிவுடன் வாழ்க

பதினான் காயிரம் பாடல் புனைந்து
பதிமரு தூர்மணம் பாரிடை வைத்து
செந்தமிழ்த் தாய்க்குமோர் சலங்கை கட்டிய
சொந்தமே ஜின்னா சீர்புகழ் வாழ்க

சந்தனச் சோலை தவமிழங் காற்றால்
வந்தது உங்கள் வண்டமிழ் ஊற்று
கங்கை காவிரி களமுடை மண்ணினும்
பொங்கி நடந்தது புதுவளத் தமிழே

புல்லாங் குழலும் பாடுமுன் பாட்டு
பல்லாங் குழியும் பேசுமே கேட்டு
நாவலர் நாவிலும் நடக்குமுன் பாட்டு
பாவல ரெல்லாம் பாடுவர் கேட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபும் எழுதென மனந்திறந் தோனே
மார்கழி மழைபோல் வாழ்த்தியும் நின்றாய்
குயிலே கூவெனக் குடையும் பிடித்தாய்
கொஞ்சும் தமிழே குறிஞ்சி நிலாவே!

மோகன மாகிய ஹம்சியா பரீதா
வாகுடல் கண்டு வளைத்தெடுத் தாயோ
மீட்டிய ராகம் நான்கினைக் கொண்டு
மேதினி வாழ்வை மின்ன வைத்தாயோ

சிறுவர் பாடல் சிறுகதை புதினம்
அறுவடை உங்கள் அழகுறு தமிழில்
பெருநதி போலப் பெருகிய தமிழே
பெருமை கொண்டது பிறந்த நல்லூரே

கடமையிற் கண்ணுங் கருத்து மிருப்பாய்
தடையெது வரினும் தாவி அறுப்பாய்
படைவரி னும்மவர் பாதம் பணியாய்
இடருடைத் தவர்மேல் ஏறெனப் பாய்வாய்

நேரிய பேச்சும் நெஞ்சினிற் பரிவும்
கூரிய தமிழும் கொழுகொழு நட்பும்
இனமதச் சாயம் இம்மியு மில்லா
குணங்குடி கொண்ட குளிர்நில வோனே!

இத்தனை காப்பியம் எப்படிச் செய்தார்
நித்தமும் நெஞ்சில் நினைவெழுந் தாடும்
முத்தமிழ் வித்தே மூவா மருந்தே
வித்தகர் ஜின்னா வண்ணமே வாழி.

●●●

சிறப்புக் கவிதை ஆக்கம்:
**மரபுக் கவிஞர் மருதமுனை ஹஸன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல்

# மூத்த எழுத்தாளர், கவிஞர் சட்டத்தரணி சேகு இஸ்ஸத்தீன் காலமானார்.

மூத்த இலக்கிய ஆளுமையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபக தவிசாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி 'வேதாந்தி' எம்.எச். சேகு இஸ்ஸத் தீன் அவர்கள் 28-11-2024 தனது 80ஆவது வயதில் அக்கரைப்பற்றில் காலமானார்கள்.

கவிதை மீது தான் கொண்ட காதலின் காரணமாக கவிக்குயில் கவிதாவைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர்.

மகள் ஜனாபா சுல்பிகா ஹஸனா அவர்கள் பிரதமரின் பிரத்தியேகச் செயலாளராகக் கடமையாற்றுகிறார்.

1944 ஆம் ஆண்டு மே 12ஆம் திகதி பிறந்த இவர் அரசியலுக்கப்பால் நாடறிந்த மூத்த கவிஞரும் சிறுகதை எழுத்தாளரும் இலக்கிய ஆளுமையாகும்.




சட்டத்தரணி சேகு இஸ்ஸத்தீன்
1944.05.12 - 2024.11.28


"இருளின் நிழலில்" என்ற இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு மூன்றாவது மனிதன் வெளியீடாக 15-08-1997இல் எம். பௌசர் அவர்களினால் வெளியிடப்பட்டது. நூலின் பின்னட்டைக் குறிப்பில் "பொய்மை நிரம்பிய காலத்தின் இருட் குகையினுள் உண்மையான சத்தியக் கலைஞனை புதைத்துவிட முடியாது" என்கிறார் பதிப்பாளர் எம். பௌசர் அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அத்தொகுப்பில் வெளியான தாய் தந்தைக்கான சமர்ப்பணத்திற்கு வரையப்பட்ட ஓவியம் அண்மையில் வேதாந்தியின் சிறுகதைகளைத் தேடிப்பிடித்து அக்கரைப்பற்று மக்கள் பதிப்பகம் ஊடாக 'வேதாந்தி சிறுகதைகள்' என்ற பெயரில் சர்ஜூன் ஜமால்தீன் அவர்கள் வெளியிட்டிருந்த நூலின் அட்டைப்படமாக வெளி வந்துள்ளமை சிறப்பாகும்.



"என் சிறு கதைகளும் கால வெள்ளத்தில் காணாமல் போகாமல் அவை இலக்கிய ஜீவகீதமாக ஒலிக்க வேண்டும் என்றே என் பிரியத்திற்குரிய நேசர்களால் வெளியிடப் பட்டுள்ளது. நான் வாழும் பொழுதே எனது இக் கனவை பலிக்கச் செய்தமை என் பெறுபேறேயாகும்" என்று குறிப்பிடுகின்றார், நூலாசிரியர் வேதாந்தி.




பின்னைய காலங்களில் முஸ்லிம் தேசியம் என்ற கருப்பொருளில் அவர் எழுதிய "முஸ்லிம் சுய நிர்ணயம்", "முஸ்லிம் சமகூஷ்டி" "முஸ்லிம் சுயாட்சி" என்ற மூன்று புத்தகங்களும் முஸ்லிம் அரசியல் பரப்பில் மிக முக்கியமானவை.




**நிறையவே எழுதாவிட்டாலும்**
**வேதாந்தி எழுதிய அனைத்தும்**
**நிறைவானவையே!**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிராதிப்போம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சாஹித்தியரத்னா' மு. பொன்னம்பலம் காலமானார்.


யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் மு. பொன்னம்பலம் அவர்கள் தனது 85 ஆவது வயதில் 07-11-2024 அன்று காலமானார். ஆசிரியப் பணியை மேற்கொண்டவர்.

கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனக் கட்டுரைகள், ஆய்வுகள் என பல்துறைகளிலும் இலக்கியத்துக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர். ஆங்கிலத்திலும் கவிதைகளை எழுதியவர்.

1950களில் கவிதை எழுதத் தொடங்கிய இவர் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக எழுதி வந்தவர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'திசை' வாரப் பத்திரிகையின் ஆசிரியர்.

முதற் கவிதைத் தொகுதியான **அது** 1968 இல் வெளிவந்தது.

மு. தளையசிங்கம் இவரது சகோதரர் என்பது குறிப்பிடத் தக்கது.



**மு. பொன்னம்பலம் (மு. பொ.)**
*(26.08.1939 - 07.11.2024)*

**விருதுகளும் பரிசுகளும்:**

இவர் எழுதிய **திறனாய்வின் புதிய திசைகள்** என்ற நூலுக்கு மலேசியாவில் தான்சிறீ சோம சுந்தரம் கலை, இலக்கிய அறவாரியம் 2010/2011 ஆம் ஆண்டுகளுக்கான அனைத்துலகப் புத்தகங்களுக்கான இலக்கியப் பரிசாக 10,000 அமெரிக்க டாலர்களை வழங்கிக் கௌரவப்படுத்தியது.

**இவரது நூல்கள்:**


1. அது - கவிதைகள் (1968)
2. அகவெளிச் சமிக்ஞைகள் (1980)
3. மு. தளையசிங்கம் ஒரு அறிமுகம் - வாழ்க்கை வரலாறு (1985)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விடுதலையும் புதிய எல்லைகளும் - சமூகவியல் (1986)
5. விலங்கை விட்டெழும் மனிதர்கள் (1987)
6. பேரியல்பின் சிற்றொலிகள் (1990)
7. யதார்த்தமும் ஆத்மார்த்தமும் - இலக்கிய கட்டுரைகள் (1991)
8. நான் அரசன் - சிறுவர் பாடல்கள் (1995)
9. கடலும் கரையும் - சிறுகதைகள் (1996)
10. காலி லீலை - கவிதைகள் (1997)
11. நோயில் இருத்தல் - நாவல் (1999)
12. திறனாய்வு சார்ந்த பார்வைகள் - இலக்கிய வரலாறு (2000)
13. ஊஞ்சல் ஆடுவோம் - சிறுகதைகள் (2001)
14. பொறியில் அகப்பட்ட தேசம் - கவிதைகள் (2002)
15. சூத்திரர் வருகை - கவிதைகள் (2003)
16. விசாரம் - இலக்கிய கட்டுரைகள் (2004)
17. ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல் - சமூகவியல் மொழிபெயர்ப்பு (2005)
18. இலக்கியத் தொடுவானை நோக்கி (2006)
19. முடிந்து போன தசையாடல் பற்றிய கதை - சிறுகதைகள் (2006)
20. மு. தளையசிங்கம் படைப்புகள் - 1122 பக்கங்கள் (2006)
21. A Country Entrapped - Poem (2007)
22. நீர்க்கோலங்கள் - சிறுவர் இலக்கியம் (2008),
23. கடலும் கரையும் - சிறுகதைகள் (2008)
24. பேரிடர்களை பெருவாய்ப்புகளாக மாற்றுதல் - நலவியல் (2008)
25. நாடும் நமது போக்கும்: அரசியல் 2007-2008 - மொழிபெயர்ப்பு (2009)
26. கவிதையில் துடிக்கும் காலம் - கவிதைகள் (2009)
27. திறனாய்வின் புதிய திசைகள் - விமர்சனம் (2011)
28. வாசிப்பதும் வாசிக்கப்படுவதும் - இலக்கிய கட்டுரைகள் (2012)
29. ஓயாத கிளர்ச்சி அலைகள் - மொழிபெயர்ப்பு (2014)
30. சங்கிலியன் தரை - நாவல் (2015)
31. அடிபெயர்க்கும் நினைவுகள் (2024) - இன்னும் பல.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிராதிப்போம்.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல்

# இலக்கிய ஆளுமை மௌலவி காத்தான்குடி பௌஸ் காலமானார்.

மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள் கடந்த 06-12-2024 காலமானார்கள். மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் உதுமா லெப்பை - ஹசீனா உம்மா தம்பதியினருக்கு 1959இல் பிறந்தவர். ஐனுல் றிபாயா நூர்தீனை மணந்தவர். இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். அட்டாளைச்சேனை அரபுக் கல்லூரியில் கற்று மௌலவி பட்டம் பெற்றவர். பலப்பிட்டிய ஜும்ஆ பள்ளிவாசலில் 09 வருடங்களும் பாணந்துறை, ஹேனமுல்லை அல்-முபாறக் ஜும்ஆ பள்ளிவாசலில் 26 வருடங்களும் பேஷ் இமாமாக மார்க்கப் பணியாற்றியவர்.



மௌலவி காத்தான்குடி பௌஸ்
(1959 - 2024)

இலங்கையில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். 1974 முதல் 50 ஆண்டுகளாக தொடர்ச்சியாக எழுதி வந்தவர்.

பல குரல்களிலும் பேசக் கூடிய திறமை மிக்கவர். நெருங்கிய நண்பர்களுடன் விகடமுடன் பேசுவார். வானொலி, தொலைக் காட்சிகளில் அதிகம் மார்க்க உரை நிகழ்த்தி வந்தவர். அதே போல் கவியரங்கம்களிலும் பங்கெடுத்து வந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இஸ்லாமிய இலக்கியம் சார்பான 15 நூல்கள் உட்பட மொத்தம் 22 நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள்,

1. காதிக்கோட் - கவிதைகள் 2006
2. முஅத்தினின் முறைப்பாடு - கவிதைகள் 2006
3. வைகறை வாசம் - கவிதைகள் 2006
4. காத்திருந்த கண்கள் - சிறுகதைகள் 2007
5. பாரெங்கும் பலஸ்தீனம் - கவிதைகள் 2007
6. பாசம் என்ற பாதையிலே - கவிதைகள் 2009
7. விடியலுக்கான விலாசங்கள் - போர்க்காலக் கவிதைகள் 2014
8. நபிகள் நாயகமே - கவிதைகள் 2014 என்பன அடங்கும்.

**பெற்ற விருதுகள்:**


- கலாபூஷணம் விருது 2019
- கலைஞர் விருது 2002 (உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு)
- பத்ருல் மில்லத் விருது 2005 (முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம்)
- கவிச்சுடர் 2006 (பாவலர் பண்ணை, காத்தான்குடி)
- இலக்கிய ஜோதி விருது 2007 (காத்தான்குடி பிரதேச செயலக இலக்கிய விழா)

போன்ற 15 இற்கும் மேற்பட்ட விருதுகள்.





**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிராதிப்போம்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா இதழ் 15 சிறப்புப் பார்வை.

# நீலவான ஓடையில் நீந்துகின்ற வெண்ணிலா.

## கலாபூஷணம் எம்.எம். மன்ஸூர், மாவனல்லை.




கிழக்கு வானில் உதயமாகி உலாவரும் வெண்ணிலாவின் பதினைந்தாவது இதழ் வெளிவந்து பூரண நிலவாகப் பிரகாசிக்கிறது. ஆம், கவிஞர் எஸ்.ஏ. கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மருதமுனையிலிருந்து வெளிவரும் கவிதை மஞ்சரியான "வெண்ணிலா" தற்பொழுது இலக்கிய வானில் நீந்திக் கொண்டிருக்கிறது. இம்முறை வெண்ணிலா இதழ் தெற்கின் இலக்கிய ஆளுமை வெலிகம ரிம்ஸா முஹம்மத்தின் படத்தை முன் அட்டைப் படமாகத் தாங்கி வெளிவந்திருக்கிறது.

இதழின் உள்ளே நுழைந்தால் ஆசிரியர் பக்கத்திலிருந்து கவிஞர் அபார் அவர்களின் மறைவுச் செய்தியை அறிய முடிகிறது. இச்செய்தி எமக்கெல்லாம் அதிர்ச்சிச் செய்தியாக, வந்திருப்பது கவலை தருகிறது. **2024.08.26** இல் கவிஞர் அபார் இறையடி சேர்ந்திருக்கிறார்.

இதழின் அட்டைப் படக் கட்டுரையை "தெற்கின் இலக்கியப் பொற்சித்திரம் பன்முகப் பெண் ஆளுமை வெலிகம ரிம்ஸா முஹம்மத்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தலைப்பில் ஏறாவூரைச் சேர்ந்த கோட்டக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு நிலை) கனல் கவி, கவிமணி அப்துல் றஸ்ஸாக் சேகுதாவூத் அவர்கள் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய கட்டுரையில் எழுத்தாளர் ரிம்ஸா முஹம்மத்தைப் பற்றியும் அவரது படைப்புகளைப் பற்றியும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து மிகச் சிறந்ததொரு அட்டைப்படக் கட்டுரையைத் தந்திருக்கிறார்.

பன்முக எழுத்தாளர் கவிஞை, சஞ்சிகை ஆசிரியை என விரிந்து செல்லும் தகைமைகளைக் கொண்ட எழுத்தாளர் ரிம்ஸா முஹம்மத்தைப் பற்றி இவர் குறிப்பிடும் போது "பேராற்றல் நிறைந்த பெண்மையை - இலக்கியவாதி, எழுத்தாளர், கட்டுரையாளர், கவிஞர், சிறந்த நூல்கள் விமர்சகி, ஆய்வாளர், சிறுவர் படைப்பாளி, நேர்காணல்களிலோ நேர்த்தியானவர், பன்னூலாசிரியர், உன்னத ஊடகவியலாளினி, சஞ்சிகையாசிரியர், இலக்கியச் செயற்பாட்டாளர், சமூக ஆர்வலர் இப்படிப்பல முகங்களைக் கொண்டவரை எப்படி விழிப்பேன்? இத்தனை செயற்பாடுகளில் கோலோச்சும் இவரை அத்துணை ஆற்றல் நிறைந்த செயற்பாட்டுத் திறனாளியை எப்படி விழிப்பேன்" என்று ரிம்ஸா முஹம்மதின் இலக்கியப் பணிகள் குறித்து ஒரு பந்தியிலேயே சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், மேற் சொன்ன ஒவ்வொரு துறைக்குமான குறிப்புக்களை இங்கு தருவதற்கு இந்த விமர்சனப் பத்தி இடம் தராது. என்றாலும் அவரது ஆளுமைக்குள் வரும் அவரது படைப்புகள், கட்டுரைகள், நேர்காணல்கள், கவிவரிகள் என ஒலி ஊடகங்களான சூரியன், சக்தி உட்பட அச்சு ஊடகங்களான தினகரன், தினக்குரல், வீரகேசரி, தினமுரசு, சுடரொளி, விடிவெள்ளி, தமிழன் என இலங்கையில் வெளிவரும் அத்தனை பத்திரிகைகளிலும் மல்லிகை, ஞானம், ஜீவநதி, செங்கதிர், வெண்ணிலா போன்ற பிரபல இலக்கியச் சஞ்சிகைகளிலும், இவருடைய எழுத்துக்கள் பிரகாசிக்கின்றன. அதேவேளை தமிழ் இலக்கியப் பாட நூல் மொழிப்பதிப்பு, ஒப்புநோக்குதல் போன்ற செயற்பாடுகளுக்கும் இவர் பங்களிப்பு வழங்கியிருப்பதோடு 300க்கும் மேற்பட்ட கவிதைகளை இலக்கிய உலகுக்குச் சேர்த்திருப்பது அவரது திறமைக்குச் சான்று பகர்வதாக உள்ளது. இவர் கல்வித் துறைக்கென கணக்கீட்டுத் துறையில் **AAT, IAB** போன்ற கற்கை நெறிகளைக் கற்றுள்ளார். இத்துறையுடன் தொடர்புள்ளதாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (2004), கணக்கீட்டுச் சுருக்கம் (2008), கணக்கீட்டின் தெளிவு (2009) போன்ற மூன்று நூல்களை வெளியிட்டிருக்கிறார். கணக்கீட்டுத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும். அத்துறையில் ஈடுபடுபவர்களுக்கும் பெரிதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படத்தக்கதாக இந்நூல்கள் திகழ்கின்றன.

அதேபோன்று 12 வருடங்களாக இவரை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த "பூங்காவனம்" என்ற இலக்கியச் சஞ்சிகையை, தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவி அனுராதபுரத்தைச் சேர்ந்த சரிப்தீன் சரீபா பீவி என்பவர் தனது பல்கலைக்கழக ஆய்வுக்காக எடுத்துக்கொண்டதோடு "இலங்கைச் சஞ்சிகை வரலாற்றில் பூங்காவனம் ஒரு மதிப்பீடு" என்ற தலைப்பில் நூலாகவும் வெளியிட்டுப் பெருமை சேர்த்திருக்கிறார். அதேவேளை, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மற்றொரு மாணவியான தர்கா நகரைச் சேர்ந்த சுமையா சரீப்தீன் என்பவர் தனது பட்டப் படிப்பை பூரணப்படுத்தும் முகமாக "தென்னிலங்கைத் தமிழ்க் கவிதைகள்" பற்றிய ஆய்வை மேற்கொண்டபோது தென்னிலங்கைப் படைப்பாளியான ரிம்ஸா முஹம்மத்தின் கவிதைப் படைப்புகள் பற்றியும் சிறப்பாக நோக்கியுள்ளார். அவர் தனது ஆய்வைத் "தென்னிலங்கைத் தமிழ்க் கவிதைகள்" என்ற பெயரில் 2021 ஆம் ஆண்டு நூலாக வெளியீடு செய்துள்ளார். எனவே பல்கலைக்கழக மட்டத்திலும் இவருடைய இலக்கியப் பங்களிப்புக்கள் கவனிப்பைப் பெற்றுள்ளதில் மகிழ்ச்சிகொள்ளாமல் இருக்க முடியாது.

வெலிகம ரிம்ஸா முஹம்மத் சொந்தப் பெயரிலும், வெலிகம கவிக்குயில், நிலாக்குயில், கவித் தென்றல், ஆர்.எம். என்ற புனைப் பெயர்களிலும் தமது ஆளுமையை வெளிக்காட்டியுள்ளார். இவர் தனது இலக்கியப் பணிகளுக்காக பொன்னாடைகளுடன் சாமஸ்ரீ கலாபதி, காவிய பிரதீப (கவிச்சுடர்), கலாபிமானி, கலைமதி, கவித்தாரகை, கலைச்சுடர் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் பணப் பரிசில்களையும் பெற்றுள்ளார். இவர் தென்னகத்தில் உதித்து, இலக்கிய வானில் கொடி கட்டிப் பறக்கும் ஒரு காத்திரமான இலக்கியப் பெண்மணி என்றால் மிகையாகாது. அத்தோடு தேசிய மற்றும் சர்வவேச ரீதியாக நடைபெற்ற கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பங்கு பற்றி பணப் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பாராட்டுக்களையும் பெற்றிருப்பது இவரது திறமைக்குக் கிடைத்த இன்னுமொரு சான்றாகும். இவர் இதுவரை 14 நூல்களை வெளியிட்டிருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வெண்ணிலாவின் தகவல் பக்கத்தை நோக்கும்போது அந்நாளைய வெண்ணிலாவை நினைவுக்குக் கொண்டுவரும் வகையில் 1978 ஆம் ஆண்டு வெளிவந்த அதன் இரண்டாவது இதழில் (1978 மே மாதம்) அமரர் எஸ் அகஸ்தியரின் "காதல் தத்துவம்" என்ற குட்டிக்கதை இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியது. ஐக்கிய இராச்சியத்தில் இருந்து சோபா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "காற்றுவெளி" எனும் மின்னிதழ் 2024 ஆனி மாத இதழை பிரபல எழுத்தாளர் அமரர் எஸ். அகஸ்தியர் சிறப்பிதழாகக் கொண்டுவந்திருந்த தகவலை இந்நாளைய வெண்ணிலா இதழ் தந்திருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அருமையான ஒரு குட்டிக்கதை இன்றைய இளம்தலை முறையினருக்குப் படிப்பினையை ஊட்டக் கூடியதாக உள்ளது. அகஸ்தியரின் தகவலை ஆர். மகேந்திரன் என்பவர் வெண்ணிலாவுக்கு அனுப்பியிருந்தாகக் குறிப்பிடுகின்றார் சஞ்சிகையாசிரியர்.

இதழின் இரங்கல் பகுதியில் எம்மை விட்டுப் பிரிந்த, உயிர்த் துடிப்புள்ள பெண் ஆளுமைக் கவியரசி இஸ்மத் பாத்திமா, கிழக்கிலங்கை நாட்டார் இலக்கியங்களை நூலுருவாக்கித் தந்த நாட்டாரியல் ஆய்வாளர், எழுத்தாளர் எஸ். முத்துமீரான், நீலாவணனின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த முக்கியமான கவிஞர்களுள் ஒருவரான மு. சடாட்சரன் ஆகிய மூவரதும் இரங்கல் செய்திகளைத் தந்திருக்கிறது. அதேபோன்று அபார் மரணித்துவிட்டார் என்ற முகநூல் பதிவு ஒன்றினை எழுத்தாளர் உமா வரதராஜன் தந்திருக்கிறார்.

நூல் நயம் பகுதியில் கிண்ணியா சபீனாவின் சிறுவர் பாடல்களைக் கொண்ட செல்லச் சிட்டுக்கள் என்ற நூலை, கிண்ணியாவைச் சேர்ந்த, ஏ.எஸ். சித்தி மிஸ்ரியா அமீன் என்பவரும் கவிஞர் அலறியின் கவிதை நூலான லாலால "லா" வைப் பற்றிய நயவுரையை ஷியாம் என்பவரும் "தூரிகை வரையும் மின்மினிகள்" என்ற டாக்டர் ஜலீலா முஸம் மிலின் ஹைக்கூ கவிதை நூலைப் பற்றிய நயவுரையை ஏறாவூரைச் சேர்ந்த கவிதாயினி ரீஸா ஹனி என்பவரும் தத்தமது பார்வையில் தந்திருக்கிறார்கள். அத்தோடு பஹ்ரியா பாயிஸ் என்பவர் புரிதல் முக்கியம் என்பதனை வலியுறுத்தி "புரிதல்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினைத் தந்திருக்கிறார். மேலும் கலாபூஷணம் மருதூர் ஜமால்தீனின் "அருளைக் காண்பாய்" என்ற தலைப்பில் கவிதை ஒன்றினையும் தந்திருக்கிறார்.

இன்னும் இதழில் ஐந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை எழுத்தாளர்கள் டீன் கபூர் "ஒருதுளி" என்ற தலைப்பிலும், செம்மைத்துளியான் "அவள் அப்படித்தான்" என்ற தலைப்பிலும், கிண்ணியா சபீனா "யாருக்குத் தெரியும்" என்ற மகுடத்திலும், அட்டாளச்சேனையைச் சேர்ந்த ஷப்ரா இல்முத்தீன் "நிஜம்" என்ற தலைப்பிலும், பதுளையைச் சேர்ந்த ஷிபானா ஃபதா என்பவர் "விட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பு" என்ற தலைப்பிலும் எழுதிய சிறுகதைகள் இதழில் இடம் பெற்றுள்ளன.

மஞ்சரி கவிதைகள் பக்கத்தில் நினைவேட்டிலிருந்து முஜாமலா என்பவர் மறைந்த எழுத்தாளர் எஸ். முத்துமீரானைப் பற்றிய கவிதை ஒன்றையும், ஏ.எம். கஸ்புள்ளா, டாக்டர் ஜலீலா முஸம்மில், அலெக்ஸ் பரந்தாமன், வெலிகம ரிம்ஸா முஹம்மத், செண்பகச் சோலையாள் ஆய்ஷ், ஒலுவில் நழீம் ஹனீபா, இமையி, மயிலிறகு மனசு ஷிபானா அஸீம், மாஹிரா ஹமீட் அஸ்ஹர் என்போர் ஒவ்வொரு தலைப்புகளிலும் தத்தமது கவிதைகளைத் தந்துள்ளார்கள்.


அட்டைப் படத்தை அலங்கரிக்கும் கவிஞை வெலிகம ரிம்ஸா முஹம்மதின் "சிறகடிக்கும் சிந்தனைகள்" என்ற தலைப்பிலமைந்த கவிதையொன்றும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. அக்கவிதை மனதில் பல கற்பனைகளைத் தோற்றுவிக்கச் செய்கின்றது. இவர் மலைநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பொழுது இயற்கையின் அழகை இரசிப்பதினால் தனது மனதில் எழுந்த எண்ணங்களைக் கவிதையாக வடித்திருக்கிறார். மலை இடுக்குகளில் வழிந்தோடும் நீர் பீலிக்கரை வடிவமாகவும், விண்ணை முட்டும் மலைகளின் வனப்பும், மலைச் சாரல்களில் நெடிதுயர்ந்து வளர்ந்திருக்கும் பைனஸ் மரங்களின் அழகும், தேயிலையின் தலை தடவிச் செல்லும் தென்றல் காற்றும் நெஞ்சத்தில் மகிழ்ச்சி மழையைத் தருகிறது. தொடர்ந்து வரும் பனிக்காற்றும் எங்கும் காட்சி தரும் பச்சைப் பசேல் என்ற இயற்கைக் காட்சிகள் யாவும் மனதுக்கு இதமளிப்பதாகவும், இன்னும் அவற்றால் ஏற்படும் உணர்வுகளைப் பற்றியெல்லாம் தனது கவிதையில் அழகுற வடித்து, வாசகர் மனதில் இனம் புரியாததொரு இன்பத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளார்.

இன்னும் படித்ததவற்றில் பிடித்தவை எனும் பகுதியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கோகிலாவின் "முகநூல் முகங்கள்" ராஜகவி ராஹிலின் "ராஜகவியின் ராஜ வரிகள்" என்ற தலைப்பில் ஹைக்கூ கவிதைகளும், தமிழ்நாடு ஆ. சார்லஸ்ஸின் "அப்பாவின் மிதிவண்டி", புத்தளம் சாலிஹ் அஸீமின் "மரணம் எனக்கு மட்டுமல்ல" என்ற தலைப்பில் அமைந்த கவிதைகளும் சஞ்சிகையில் இடம்பிடித்துள்ளன. வெண்ணிலா பற்றிய கருத்துக்களும் இதழின் கடைசிப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. மொத்தத்தில் வெண்ணிலாவில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் யாவும் சிறப்பு அம்சங்களாகவே இருக்கின்றன. எனது பாராட்டுக்கள்!!! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்







## ஆண்டுச் சந்தா ரூபா. 1000

வங்கியில் பணத்தை வைப்பிலிட்டு **0776968671** என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு வைப்புச் சீட்டின் நிழற்பிரதியையும் உங்களது தபால் முகவரியையும் அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து நான்கு **வெண்ணிலா** காலாண்டிதழ்கள் தபால் மூலம் உங்கள் வீடு வந்து சேரும்.

**வங்கிக் கணக்கு விபரம்:**

எஸ். ஏ. அப்துல் கப்பார்
கணக்கிலக்கம்: **6106068**
இலங்கை வங்கி,
கல்முனை.


S. A. ABDUL GAFFAR
A/C No. **6106068**
Bank of Ceylon,
Kalmunai.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் அறிவோம்

பனியாறு (Glacier) என்பது மிக மிக மெதுவாக ஓடும் (நகரும்) பனியினாலான ஆறு ஆகும். இதனைப் பனிப் பையாறு என்றும் கூறலாம் (பைய = மெதுவாக). இறுகிய பனிப்படைகள் புவியீர்ப்பினால் நகரத் தொடங்குவதனால் இப் பனியாறுகள் உருவாகின்றன. புவியில் உள்ள மிகப்பெரிய நன்னீர் இருப்பு பனியாறுகளே ஆகும். உலகிலுள்ள மொத்த நீர் அளவிலும், கடல் களுக்கு அடுத்தபடியாகப் பெரிய அளவான நீர் பனியாறுகளாகவே உள்ளன. துருவப் பகுதிகளில் பெருமளவு பரப்பு பனியாறுகளால் மூடப்பட்டிருக்க, வெப்பவலயப் பகுதிகளிலோ இவை உயர்ந்த மலைப் பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன. புவிக்கு வெளியே செவ்வாய்க் கோளில் பனியாறுகள் இருப்பது அறியப் பட்டுள்ளது. பனியாறுகள் நிலப் பரப்பில் மட்டுமே உருவாகும். இது கடலிலும் ஏரிகளிலும் உருவாகும் மெல்லிய பனியிலிருந்து நன்கு வேறுபடும்.

99% ஆன பனியாறுகள் துருவப் பகுதிகளிலுள்ள பனி விரிப்புகளில் காணப்படுகின்றன. மற்றவை ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள மலை குன்றுகளிலும் உயர் தீவுகளிலும் உள்ளன. புவியில் காணப்படும் நன்னீர் மூலங்களில் மிகப் பெரியதும் இந்த பனியாறுகளே. உலகத்தில் இருக்கும் மக்கள் தொகையின்




வடக்கு பாக்கிஸ்தானில் உள்ள பல்டோரோ பனியாறு. 62 கிலோ மீட்டர்கள் (39 மைல்) நீளம். இது உலகில் உள்ள மிக நீளமான பனியாறுகளில் ஒன்று.

ஒன்றில் மூன்று மடங்கு மக்களுக்கான நன்னீர்த் தேவை இந்த பனியாறுகளாலேயே பூர்த்தி செய்யப் படுகின்றது. தாவரங்கள், விலங்குகள் மனிதரின் நனீர்த் தேவையை ஈடுசெய்ய முக்கியமாக இந்த பனியாறுகள் பயன்படுகின்றன. பெரும்பாலான பனியாறுகள் குளிர் காலங்களில் நீரை சேமித்து கொண்டு கோடை காலங்களில் உருகி நீரை கொடுக்கும்.

பனியாறுகள் நீண்டகால காலநிலை மாற்றங்களால் பாதிப் புக்கு உள்ளாவதனால், இந்தப் பனியாறுகளில் ஏற்படும் மாற்றமானது காலநிலை மாற்றங்களையும், கடல் நீர் மட்டத்தில் ஏற்படும் மாற்றத்தையும் மிக இலகுவாக காட்டும் குறியீடாகக் கொள்ளப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறிப்பிட்ட இடத்தில் பனிப் பொழிவின் வேகம் ஆவியாதலின் வேகத்தை விட அதிகமாக இருப்பின் அங்கு பனியாறு உருவாகிறது. இன்னும் பல காரணங்கள் கூறப்பட்டாலும் இதுவே முக்கியமானதாகும். புவி ஈர்ப்பின் காரணமாக ஓரிடத்தில் விழும் பனி அழுத்தம் அடைந்து பனியாறு உருவாகிறது. இந்த அழுத்தம் மற்றும் மேலும் விழும் பனியின் எடையால் பனி தகடுகளுக்கு இடையே உள்ள காற்று வெளியேற்றப்பட்டு பனிக்கட்டியாக மாற்றம் அடைகிறது. இந்த செய்கை தொடர்ந்து நடைபெறும். மிதவெப்ப நிலங்களில் உருவாகும் பனியாறுகள், விறைத்தலும் உருகுதலுமாக மாற்றங் களுக்கு உள்ளாவதால் குருணை போன்ற நிலையை அடையும். பின்பு இவை அழுத்தத்திற்கு உள்ளாகி பனிக்கட்டியாக மாற்றம் அடைகிறது.

புறத்தோற்றம், வெப்ப இயல்பு, ஆகியவற்றை கொண்டு பனியாறுகளை தரம் பிரிக்கலாம்.

**மலை பனியாறு**

இவை மலைகளின் உச்சிகளிலும் சரிவுகளிலும் உருவாகும்.

**பள்ளத்தாக்கு பனியாறு**

ஒரு பள்ளத்தாக்கை நிரப்பும் பனியாறு பள்ளத்தாக்கு பனியாறு எனப்படும்.

**பனிக்கவிகை**

ஒரு மலைத்தொடரையோ எரிமலை யையோ மூடியிருக்கும் பனியாறு பனிக்கவிகை அல்லது பனிதுறை எனப்படும். இவற்றின் பரப்பளவு 50,000 சதுர கிலோமீட்டருக்கும் குறைவாக இருக்கும்.

**பனி படலம்**

50,000 சதுர கிலோமீட்டருக்கும் மேல் பரப்பளவு கொண்டவற்றை பனி படலம் என அழைக்கிறோம். அடியில் உள்ள இட விவரத்தை மறைத்து கொள்ளும் அளவுக்கு இவற்றின் ஆழம் பல கிலோமீட்டருக்கு இருக்கும். தற்காலத்தில் இரண்டு பனி படலங்கள் மட்டுமே உள்ளன. இவை அண்ட்டார்ட்டிக்கா மற்றும் கிரீன்லாந்து பகுதியின் மீது உள்ளன. மிக தாராளமான நன்னீர் மூலமாக இவை விளங்குகின்றன. இந்த பனி படலத்தை உருக்கினால் உலக அளவில் கடல் மட்டம் 70 மீட்டர் உயரும்.

**பனி புகலிடம்**

கடற்பகுதிக்குள் நீண்டுருக்கும் படலத்தை பனி புகலிடம் என்போம். இவை மெலிதாகவும் குறைந்த வேகத்துடனும் இருக்கும்.

**பனி நீரோடை**

குறுகிய, வேகமாக நகரும் பனி படலத்தை பனி நீரோடை என்போம். அண்ட்டார்ட்டிக்காவில் பல பனி நீரோடைகள் பனி புகலிடத்தில் முடிவடைந்திருக்கின்றன. ஒரு சில பனி நீரோடைகள் கடலில் முடிவடைவதும் உண்டு. இப்படி கடலில் முடிவடையும் பனியாறுகளில் உள்ள பனிகட்டியானது கடலை நெருங்கியதும் உடைந்து பனிப் பாறைகள் உருவாகிறது.

**மிதவெப்ப நில பனியாறு**

இவை மித வெப்ப நிலங்களில் உள்ள உயர்ந்த மலைகளில் இருக்கும். இவை ஆண்டு முழுவதும் உருகி கொண்டே இருக்கும்.

(தகவல்:
நன்றி - தமிழ் விக்கிபீடியா.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நயம்

கலாபூஷணம்
மருதூர் ஜமால்தீனின்

# திருப்பம்.

## சிறு கதைகள் மூலம் உணர்த்தப்படும் வாழ்வியல் ஒழுக்க நெறிகள்.



*19* சிறுகதைகளைக் கொண்ட இந்த நூல் சகோதரர் ஜமால்தீன் அவர்களிடம் இருந்து தபால் மூலம் கிடைத்தது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள "சிறாஜூல் மில்லத்" தமிழ் இலக்கியப் பேரவையினால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

**அஷ்ரபா நூர்தீன்**

சகோதரர் ஆர்.எம். நௌஷாத் அனைத்து கதைகளைப் பற்றிய தனது அழகிய அணிந்துரையை வழங்கியுள்ளார்.

இந்த நூலில் உள்ள கதைகளை நான்கு பிரிவுகளினுள் அடக்கலாம்.

1) உலகம் மிக வேகமாக முன்னேறிய போதிலும் வறுமையும் அதன் தாக்கங்களும் குறையா திருப்பது.

2) இஸ்லாத்தில் சாதி எனும் இழிநிலை இல்லாதிருந்த போதும் மறைமுகமாக அதன் தாக்கம் ஆதிக்கம் செலுத்துதல்.

3) பள்ளிவாயலில் கடமை புரியும் மௌலவிமார் முஅத்தின்கள் ஆகியோரது குடும்ப நிலைமை பற்றிய நிர்வாக சமூக அக்கறை இன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) வட்டி பெறுதலும், குரோத மனப்பாங்கும் தீய பழக்கங்களும் கொண்ட குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய விழிப்புணர்வு.

இந்தக் கருக்கள் மூலமாக கதைகள் இலகுவான மொழி நடையில் பேச்சு வழக்கில் அதிக நீட்சியின்றியும் தேவையற்ற சொல்லாடல்கள் இன்றியும் வாசகனை சிரமங்களின்றி வாசிக்கத் தூண்டுகிறது.

சமூகத்தில் உள்ள இந்தப் பிரச்சினைகள் தொன்று தொட்டு உலகெங்கிலும் இருந்து வருகிறது. ஆசிரியர் கதாபாத்திரங்கள் மூலமாக உணர்த்தும் இத்தகைய குடும்பங்களை நாமும் நாளாந்தம் காணுகிறோம். வறுமை என்பது சாதாரணமானதல்ல என்பதை அதை அனுபவித்தவர் உணர்ந் திருப்பர்.

பின்வரும் கதைகள் வறுமை நிலைமையினால் ஏற்படும் பலதரப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக் கூறுகிறது.

- ஓதிக்கொடுத்த தண்ணீர்.
- நேர்மையின் பரிசு.
- சேற்றில் ஒரு செந்தாமரை.

இதன் மூலம் கல்வியைத் தொடர முடியாத பிள்ளைகள், பெண்மக்களைத் திருமணம் செய்துகொடுக்க முடியாத பெற்றோரின் துயர், தாய் வெளிநாடு செல்லுதல் போன்ற யதார்த்தங்கள் சிறப்பாகப் பேசப் பட்டுள்ளன.

“துரோகத்தின் பரிசு” என்ற கதையில் வசதி படைத்த ஒருவரால் தனக்குக்கிடைத்த பலவாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்ட ஏழையின் மகன் வளர்த்த வீட்டாரின் சொத்துகளைத் திருடுதல் பற்றி கூறப்பட்டுள்ளது. நன்றி மறந்த சமூகமாக வாழுபவர்களுக்கு இக்கதையின் முடிவு நல்ல பாடமாக அமைந் துள்ளது. செய்வினை, வட்டி, கோள் புறம் பேசுதலினால் ஏற்படுகின்ற மன உளைச்சல், குடும்பத்தாரின் நிம்மதியின்மை போன்ற கதைகளாக

- வினையின் விளைவு
- தவறுகளை உணர்ந்த போது
- உள்ளம் உறுதி பெற்றால்....
- திருந்திய உள்ளம் போன்றவை உள்ளன.

இந்தத் தவறுகளினால் ஏற்படும் பல செய்திகளாலும், பின்னர் தவறுகளை உணர்ந்து திருந்தி வாழும் சிறந்த முடிவுகளாலும் இவை படைக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளின் முடிவுகளில் பல ஆரோக்கியமானதாகவும், இளைய சமூகத்துக்கு வழி காட்டுவதாகவும் இறுதியில் இறைவழியே மேலென்று உணரக் கூடியதுமான சில கதாபாத்திரங்களால் உணர்வு பூர்வமாக நெய்யப்பட்டுள்ளது.

இதுதவிரவும் பள்ளிவாயல் நிர்வாகத்தினரும் வசதி படைத்த தனி மனிதர்களும் அங்கு தொடர்ச்சியாகக் கடமை புரிந்து வரும் மௌலவி, முஅத்தின் போன்றோரை நடாத்துகின்ற பாங்கும் அவர்களின் குடும்ப, பொருளாதார, நோய் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளைக் கேட்டு அறியாமலும் உதவி புரிய முன்வராதிருப்பதுவும் பல பள்ளிகளில் நடக்கலாம்.

நூலாசிரியர் ஒரு மௌலவி யாக இருப்பதால் இது போன்ற துயர்களை இவரால் இலகுவில் புரிந்து கொள்ள முடிகிறது. இதன் எதிரொலியாக இரு கதைகள் உள்ளன. அவை

- பிராயச்சித்தம்
- பிடிவாதம் கலைந்தது

என்பனவாகும்.

அநேகமான கதைகள் இஸ்லாம் மதத்தவரோடு இணைக்கப்பட்டுள்ளது. ஒரு கதை சகோதர மத நட்பு பற்றியதான கருவில் உருவாக்கப்பட்டுள்ளது. சகோதர மதத்தவருடனான எதிர்பார்ப்பற்ற உண்மையான அன்பு ஒரு காலத்தில் இயல்பானதாகவும் பிற்காலத்தில் அது வெவ்வேறு பரிணாமங்களைப் பெற்று இயல்பு நிலை பாதிக்கப்பட்டதாகவும் வெறும் வார்த்தை உரையாடல்களாகவும் மாறிவிட்டதை அனைவரும் அறிவோம். இருப்பினும் "மனிதம் வாழும்" எனும் கருவில் உருவான இக்கதை இனமத பேதமற்ற மானுட நேயத்தைப் பறைசாற்றுகிறது. இந்த இயல்பு நிலை மானுட நேயம் முற்றிலும் அகலாது ஆங்காங்கே சில மனிதர்களிடம் காணப்படுகிறதையும் கூறவேண்டும்.

இதைத் தவிர இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத, கட்டளை யிடப்படாத சாதி பார்த்துத் திருமணம் செய்தல், சாதி குறைந்தவரோடு உறவாடுதல், போன்றவற்றை நூலாசிரியர் தனது "உயர்ந்தவன்" எனும் சிறுகதை மூலம் அழகான முறையில் கூறுகின்றார்.

இவ்வாறு கட்டமைக்கப்படுள்ள "திருப்பம்" தொகுதியிலுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளின் அடிநாதமாக இறைவனிடம் சரணடைதல், உள்ளச்சம் கொண்டு நெறிமுறை பிறழாது தவறுகளைத் திருத்தி வாழ்தல், ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களைக் காப்பாற்றுதல் போன்றவை உள்ளன.

அனைவரும் இந்த நூலை வாசிக்க வேண்டும்.

ஏராளம் கேள்விகளுக்கு விடை கிடைக்காத காலகட்டத்தில் பல நூல்களை மத சம்பந்தமாகவும் சமூகநிலை மாற்றத்துக்காகவும் தன்னால் இயன்ற அளவு நேர்மையாக தொடர்ந்து எழுதி வரும் சகோதரர் மருதூர் ஜமால்தீன் அவர்களை வாழ்த்தி அவரின் நீண்ட ஆயுளுக்கும் நலத்துக்கும் பிரார்த்திக்கிறேன்.

தொடர்ந்து நற்பணி புரிய இறைவன் அருள் புரிவானாக.

ஆமீன்.

●●●

## எழுத்தாளர், கவிதாயினி அஷ்ரபா நூர்தீன்

*மிகச்சிறந்த ஒரு படைப்பாளி. **1982** காலப்பகுதியில் இருந்து எம்மோடு எழுத்துத்துறையில் பயணித்தவர். அக்காலையில் வெளிவந்த சிந்தாமணியில் அதிகமான மரபுக் கவிதைகள் எழுதிப் பிரகாசித்தவர். அதேவேளை வானொலியிலும் பல்வேறு ஆக்கங்களைத்தந்து பெண் கவிஞர் வரிசையில் சிறந்து நின்றார்.*

*அவர் **2012** இல் "ஆகக்குறைந்த பட்சம்" என்ற கவிதைத் தொகுதியைத் தந்தார். இத்தொகுதி அதே வருடத்தில் அரச சாகித்திய விருதுக்கு மூன்றில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.*

*அக்காலப்பகுதியில் வெளிவந்த றோணியோ மற்றும் ஏனைய சஞ்சிகைகளில் அதிகம் எழுதியவர். இன்னும் பல தொகுதிக்கான படைப்புகளைத் தன்னகம் வைத்திருப்பவர்.*

*இன்றும்கூட முகநூலில் சிறந்த சமூகக் கவிதைகளைத் தந்து கொண்டிருப்பவர். இவரது கணவர் அ. முஹ்ஸின் அவர்களும் பன்னூல் ஆசிரியராக ஓர் ஆய்வாளராக சிறக்கின்றார்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஏ. மாஹிறாவின்

# மனதின் மாயம்.

## சொல்லாமல் அவிழ்ந்த வேளை...

மருதமுனை பல எழுத்தாளு மைகளைச் சுமக்கும் பூமி.


குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பெயர்கூற அறியப்படும் எழுத்தாளர்களின் தரமான வரிசை அங்குள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கவிதாயினி முஜாமலா**

அந்தவகையில் மருதமுனை மாஹிறாவின் **மனதின் மாயம்** அண்மையில் எனக்குக் கிடைக்கப் பெற்றது.

அவரது முதல் தொகுதி இதுவாகும். நீண்ட முயற்சிக்குப் பிறகு கிடைத்த உந்துதலினால் மாஹிறா தனது கன்னி நூலை நமக்கு அறிமுகம் செய்திருக்கிறார். ஆனால் மாஹிறா மிக நீண்ட காலமாகவே எழுதி வருபவர் என்பதை தனது உரையில் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக 1985 இருந்தே தான் எழுதத் தொடங்கிய ஞாபகங்களைப் பதிவாக்கியுள்ளார்.




தனக்குள் ஏற்படும் உணர்வுகளின் தாக்கங்களை கவிதையாகப் புனைவதாகக் கூறியுள்ள இவர், அவை அவருக்கான பெரும் வலி நீக்கி மாத்திரைகளாக இயங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மனதின் மாயம் மொத்தமாக 100 கவிதைகளை உள்ளடக்கி 252 பக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹிராவின் கவிதைகள் கவலை, ஏக்கம், துடிப்பு, வலி, தாக்கம், தவிப்பு, அன்பு, நட்பென ஆயிரம் வாழ்வியல் மயக்கங்களை கட்டவிழ்க்கும் மனமாக அது செயற்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

"கொடுமை"என்ற கவிதையில்

சிலருக்கு எதையும் இரவலாய்
வேண்டியே பழக்கம்...
எதையும் திருப்பிக் கொடுக்கத்
தேவையில்லை என்று.

வாசகனின் சிந்தனைப்பாங்கை ஏவிவிடும் மாஹிறா இயல்பான எழுத்துத் தளமென்றை வாசகன் முன் காட்சியாக விவரிக்கிறார். இவ்வாறு சமூக அவலத்தை நோக்கி கல்லெறியும் இவர், "அழும் தேசம்" கவிதையில்

என் தேசத்தின் மீது
யாரோ!...
கல்லெறிந்து போனார்கள்.

என்று அறம் பாடுகிறார்.

இப்படி எளிமைப் படிமம் வந்து விழும்போது பாடுபொருள் வாசகனுக்கு மகிழ்ச்சியளிக்கும் சுவை என்றே கூறலாம்.

இன்னும், "அழகு" கவிதை

கடலுக்கு அலை அழகு
வானத்துக்கு நிலவழகு
மேகத்திற்கு மின்னல் அழகு
.........................
மனிதருக்கு நட்பழகு.

என்று அழகைச் சொற்களில் நிரப்பிக் காட்டுகிறது என்றே சொல்லத் தோன்றுகிறது.

மேலும் தனது பிரதேச தொழிலான நெசவுத் தொழில் பற்றியும் மனதின் மாயத்தின் 63ஆம் பக்கத்தில் பதித்துள்ளார்.

இவ்வாறு தன்னைச் சூழ்ந்த சமூகம் தொடர்பான வேண்டு தல்களை பல கவிதைகளில் வெளிப்படுத்தியும் உள்ளார்.

இவரது கவிதைகளில் அனே கமானவை வானொலிக்கு எழுதப்பட்ட கவிதைகள் என்பதால் பிரச்சாரம் மற்றும் அறிவித்தலின் பன்முகைமையாகவே நிறையப் படைப்புகள் பதியப்பட்டுள்ளன.

இதே விடயத்தை அணிந்துரை வழங்கிய கலாநிதி சத்தார் எம். பிர்தௌஸ் அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்னும், வாழ்க்கை குறித்தான காலத்தின் நெருக்குதலை மொழியில் வடிவமைக்க முயலும் மாஹிராவின் இன்றைய **மனதின் மாயம்** அவரது வலிகளுக்கு நிவாரணி என்ற பொருளில் வளர்த்தெடுப்போம்.

அது அவரது தீராத வாசிப்பையும் தொடரான எழுத்தின் நாட்டத்தையும் வளர்த்து நிச்சய மாக அவரை மிகப் பெரும் ஆளுமையாக வளர்த்தெடுக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

வாழ்த்துக்கள் மாஹிறா! ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஏ. கப்பாரின்

# அப்பாவின் டயரி.


## ஆறுதல் அளிப்பதாய்...

**கவிதாயினி முஜாமலா**

சிறுகதை என்பது ஒரு கனமான கலை வடிவம். இதைக் கையாள்வது அவ்வளவு எளிதானதல்ல. அப்படிப்பட்டக் கலை வடிவத்தைக் கொண்ட எழுத்தாளர் அப்துல் கப்பார் அவர்களின் **அப்பாவின் டயரி** அண்மையில் கிடைக்கப் பெற்றது.

வெண்ணிலா ஆசிரியராகத் தெரிந்த அப்துல் கப்பார் அவர்களின் இந்தச் சிறுகதைத் தொகுதி, அவரது சிறுகதை மீதான ஈர்ப்பையும் ஆழ விசாலத்தையும், இலக்கிய பன்முகம் என்பவற்றின் மீதான காதலையும் பெருகி வளரத் துடிக்கும் முயற்சிகளையும் காட்டுகிறது என்றால் அது பொருத்தமாகவே இருக்கும்.

ஒரு கதை எழுதும் முன் எழுத்தாளன் ஏதோ ஒரு தூண்டுதலுக்கு ஆளா கிறான். அதை யாரிடமாவது சொல்லி தனது கருத்தை அல்லது எதிர்வினையைத் தெரிவிக்கத் துடிக்கிறான். அந்தக் கருத்தை அல்லது எதிர்வினையைத் தெரிவிக்க ஏற்ற வடிவம் எது என்று அவன் முடிவுசெய்வதென்பது மிக முக்கியமானது அவ்வகையில்,




கப்பார் சேரும் தனது உரைப் பகுதியில் தன்னை இவ்வாறு அறிமுகப் படுத்திக் கொள்கிறார்.

"1977முதல் எழுதிவரும் ஒரு சாதாரண படைப்பாளி. கண்ணால் காணும், காதால் கேட்கும், மனதால் உணரும் அன்றாட சம்பவங்களைப் படம் பிடித்து எழுத்தில் வடிப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வழக்கம்" என்று கூறி தன்னைச் சுற்றியுள்ள ஏதோ சில விடயங்கள் கதைப்பாணியாக வளர நாட்டம் கொடுத்துள்ளது என்று கூறியுள்ளார்.

இன்னும் அவர் அந்த சிறுகதைகளை எளிமையின் நிரம்பலாகத் தந்துள்ளார் என்பதால் கதாசிரியரை கண்டிப்பாக பாராட்ட முடியும்.

பல்வேறு கருப்பொருட்களை உள்ளடக்கி மொத்தமாக 15 கதைகளைக் கொண்டுள்ள **அப்பாவின் டயரி** தொடக்கத்திலேயே வாசகனைத் தப்ப விடாமல் பிடிப்பது போல "துரோகம்" என்றொரு தலைப்பைக் கொடுத்துள்ளது.

அந்தக் கதைக் களம் இவ்வாறு ஆரம்பிக்கின்றது.

"போலீஸ் நிலையத்தை நெருங்க நெருங்க...."

ஆரம்பத்தில் நானும் திகில் கதையோ அல்லது தந்திரக் கதையோ என்றெல்லாம் யோசித்தேன். பிறகு கதையின் இறுதிப் பகுதியை அண்மிக்கு நேரமே புரிந்து கொண்டேன் அக் கதைக்களப் பின்னணியை.

ஒரு பெண் தனது கணவன் சமூகத்திற்கு எதிராக போதை விற்பவன் என்பதை அறிந்தவள் அவனுக்கெதிராக இந்த சமூகத்தையும் இளம் பிள்ளைகளையும் காப்பாற்ற வேண்டுமென எண்ணி தயங்காமல் காவல் நிலையம் போகிறாள்.

அதன் தொடக்கமே இந்த திக் திக் பகுதி. அந்த வகையில் கதையின் இறுதிப் பகுதி வரை கச்சிதமான யுக்தியைக் கையாண்டுள்ளார் ஆசிரியர் என்றே கூற வேண்டும்.

இருந்தாலும் ஒரு சிறிய நெகிழ்ச்சி மனதுக்குள். பெரும்பாலும் இச்சிறுகதை கதாபாத்திர விவரிப்போடு உரையாடல் பாங்குடையதாக விரிந்திருந்தால் இன்னமும் சுவாரஸ்யங்களாய் அமைந்திருக்கும் என்பதே எனது உணர்வோட்டமாக அமைகிறது.

இன்னும், **அப்பாவின் டயரி** சிறுகதைத் தொகுதி வெள்ளத் தம்பி நானா என்ற முதன்மைக் கதாப்பாத்திரத்தினை வைத்து அதன் வளர்ச்சியை வாசகனிடம் எவ்வாறு கொடுத்திருக்கிறது, அதில் வெற்றி பெற்றிருக்கிறது என்று பார்ப்போம். "வற் வரியும் வெள்ளத்தம்பி நானாவும்" எனும் கதை. அதற்கொரு நல்ல எடுத்துக் காட்டு.

உண்மையிலேயே கதையில் இருப்பது வெள்ளைத் தம்பி எனும் கதாப்பாத்திரமா அல்லது நாம்தானா என்று மனவோட்டம் மீண்டும் ஒரு முறை விசாரித்துக் கொண்டது. அவ்வளவு துல்லியமான கதைக் களம் அது. வரி பற்றிய தெளிவூட்டலாய் சாதாரண குடிமகன் வரிகள் மூலம் எதிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் சிக்கலை எடுத்துக் காட்டியுள்ளது.

இன்னும் அதுபற்றிய சிறு பலவீனத்தையும் இங்கு முன் வைக்க விரும்புகிறேன். சமகாலத்தில் நமக்கு அறிமுகப் படுத்தப்பட்டு சுமையாகப் பார்க்கப்பட்ட வரி மீதான கவனம் என்பதால் பிரச்சாரத் தொனி இல்லாமல் லாவகமாகமான சூழலுக்கு நகர்த்தி இருந்தால் வாசகனின் உணர்வை இன்னமும் கதாசிரியர் தனக்கு ஏற்பட்ட மன உணர்வைப் போல காட்டியிருக்கலாம் என்பதே எனது கருத்து.

சிறுகதையைப் பொறுத்தவரை கதைக்குப் பின்னேயுள்ள கதாசிரியரின் கலையாற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் சொல்ல விரும்பும் செய்தி இவ்வளவும் இலக்கண வரம்புகளை விடவும் மிகமிக முக்கியமானவை என்பது சிறுகதை ஆய்வாளர்களின் பெரும் சேதி என்பதை சிறுகதைப் படைப் பாளர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்தமான கதைக் களங்களைப் பார்க்கையில் இன்னும் பல நல்ல சிறு கதைகளும் இங்குண்டு. பட்டறிவு, பயணங்கள், அப்பாவின் டயரி யென தொடரும் கதைக்களத்தை, சிறுகதைகள் கதாசிரியர் எடுத்துக்கொண்ட நோக்கத்தைச் சரியாகச் செய்துவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

இக்கதைகள் தனது சிந்தனையூடாக இச்சமூகத்தின் கன்னத்தில் அறைந்து தூக்கத் தைக் கலைக்கும் முயற்சியில் வெற்றிபெறும் என்பது எனது வாசிப்பனுபவம். அந்தவகையில் கதாசிரியரான அப்துல் கப்பார் சேருக்கு எனது வாழ்த்தும் பாராட்டுக்களும்.

●●●

## கவிதாயினி முஜாமலா

ஒலுவில் பிரதேசத்தில் மிளிரும் பெண் கவிஞர்களில் முதன் முதலில் கவிதை நூல்களை வெளியிட்டு சாதனை படைத்தவர் கவிதாயினி முஜாமலா அவர்கள். இவரது ஆற்றலுக்கு அண்மையில் வெளிவந்த இரு கவிதைப் பிரதிகளான **றூஹின் சிறகுகள்** மற்றும் **நீதம்** என்பன சான்று பகர்கின்றன. அடக்குமுறைக்கும் வன்முறைகளுக்கும் எதிராக உரத்த குரல் எழுப்பும் இவரது எதிரலைகளை இவரது அண்மைக்கால முகநூல் கவிதைகளில் காணலாம்.

வளர்ந்துவரும் சிறந்த கவிஞர்களுள் இவர் குறிப்பிடத்தக்க ஒருவர் மட்டுமல்ல சிறந்த விமர்சகியும் கூட.

இம்முறை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள இலக்கியத்துக்கான **இளங்கலைஞர்** விருதைப் பெற்றவர். (2024)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை


# வலியால் நனைந்த விழி.

- எச்.டீ.எச் பஹ்தா,
கொழும்பு.

சோகமும், கவலையும் தோய்ந்த முகத்தோடு ரிஷ்மா அடுப்பை ஊதிக்கொண்டு இருந்தாள்.

அதைப் பற்றவைக்க அவள் பட்ட பாடு இருக்கே, அப்பப்பா. விறகு பற்றவே மாட்டேன் என அடம் பிடித்தது. ஆனாலும் ஒரு வழியாக உணவைத் தயார் செய்துவிட்டு வந்து 'ரியாஸ் மகன்' என்று கூப்பிட்டாள். அவனும் வந்து அமர்ந்தான். இருவரும் சேர்ந்து உணவை உண்டனர்.

தந்தை மறைந்தாலும் பல கஷ்டங்களைத் தன்னுள்ளே பூட்டி வைத்து, கூலி வேலைக்குச் சென்று ரியாஸை வளர்க்கப் பெரும் பாடுபட்டாள். அவன் கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுத்து அன்பையும் அள்ளிக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள். அவனும் தாயின் அன்பிலே அழகுற வளர்ந்தான். ரியாஸ் நன்றாகப் படித்துவர தாயும் மகிழ்ந்தாள். அவனின் படிப்பிற்குத் தேவையான அனைத்தையும் கேட்ட உடனே எப்படியாவது கொடுத்தாள். 'ஏன் புள்ள படிச்சா எங்களுக்கும் ஒரு விடிவு காலம் வரும் தானே.'

காலங்கள் உருண்டோடின. ஒரு நாள் பாடசாலையிலிருந்து ரிஷ்மாவிற்கு அழைப்பு வர அவளும் ஓடிச் சென்று அதிபரைச் சந்தித்து,

"ஸேர் நான் ரியாஸ்ட உம்மா."

"ஆ! வாங்க இரீங்க!!"

"உம்மா நான் சொல்றத கேட்டு நீங்க பதறாதீங்க. ஆனா மறைக்கிற விஷயமும் இல்ல. நான் இத சொல்லித்தான் ஆகனும்."

"நான் உங்கள பத்தி விசாரிச்சேன். நீங்க ரொம்ப நல்லவங்கண்டு சொன்னாங்க. கணவர் இறந்த பிறகும் கூட நீங்க உங்க குழந்தைக்கு படிப்ப குடுக்க படாத பாடுபட்டீங்களாம். ஆனாலும் உண்மைகளை மறைக்க முடியவும் இல்ல. அது வந்து உங்கட மகன் போதைக்கு அடிமையாகி இருக்காரு" என்று அதிபர் கூறி முடிக்க முன்னே ரிஷ்மா எழுந்து நின்று,

"இல்ல! இல்ல!! என் ரியாஸ் அப்படி இல்ல. நான் நம்பமாட்டேன்." என்று கூப்பாடு போட்டு அழ, அவளை அதிபர் சமாளிக்க என்னென்னமோ நடந்து முடிந்தது.

மாலை நேரம் ரியாஸ் வீட்டுக்கு வர ரிஷ்மா, "மகன் ரியாஸ் எங்க போன?"

"நான் கிளாஸ்கு போய்டு வரேன் உம்மா."

"இல்லயே! நான் போய் பார்த்தேன். உங்கட கிளாஸ்கு நீங்க வரல்லயாம்."

"நீங்க ஏன் அங்க எல்லாம் போனீங்க. என்ன வேவு பாக்குறீங்களா? இங்க பாருங்க நான் ஒன்னும் சின்னப் பையனில்ல. எனக்கும் நல்லது கெட்டது எல்லாம் தெரியும். புரிஞ்சுதா?" தூக்கி வாரிப்போட்டது ரிஷ்மாவுக்கு.

"மகன் நீங்களா இது" என்ன நடந்தது? மகன், கெட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள எல்லாம் விட்டுட்டு எனக்கு புள்ளயா பாசமா இருங்க மகன்."

தாய் கதறியும் அவன் கண்டு கொள்ளவில்லை. நாட்களும் உருண்டோடின.

மகன் பழைய நிலைமைக்கு வர அவள் படாத பாடுபட்டாள். இறைவனை நாளும் வேண்டினாள். அழுது புலம்பினாள். அவனில் மாற்றம் ஏற்படவே இல்லை.

ஒரு நாள் அவனுக்கு தாயிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவன் கண்டு கொள்ளவில்லை. மறுபடியும் மறுபடியும் வந்தன. அவன் போனை கட் செய்து விட்டு நண்பர்களுடன் கூட்டுச் சேர்ந்து அவனது எதிர்காலத்தை வீணடித்துக் கொண்டிருந்தான்.

அன்றிரவு நீண்ட நேரத்தின் பின் வீட்டை நோக்கி நகர்ந்தான். வீட்டிலே ஒரு விளக்காவது எரியாமல் இருட்டாக இருந்தது.

என்ன இது என சாத்தி இருந்த கதவைத் தள்ளி உள்ளே போனான். விளக்குகளை எரியவிட்டான். அப்போது தான் தன் தாயைத் தேடினான். தாய் நிலத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டவன் கதறி அழுதான்.

தாயின் கட்டிலில் தலையணை அருகில் கிடந்த கடதாசித் துண்டைக் கண்டவன் கைகள் நடுங்க அதை எடுத்துப் படித்தான்.

"மகனே நீ நன்றாக வர வேண்டும். திடீரென கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டு என்னால் முடியவில்லை. மகனே கடைசியாக ஒரு தடவையாவது உன் குரல் கேட்கவே நான் ஆசைப்பட்டேன். மகனே நான் போன பின்னும் நீ வாழ வேண்டும்." என எழுதியிருந்தது.

தாயைக் கட்டியணைத்து கதறி அழுதான். என்ன பயன்?

இறுதிக் கடமைகள் ஒருவாறு நடந்து முடிந்தன. தாய் உயிருடன் இருக்கும்போது தாய் சொல்வதைக் கேட்டு அவருடன் அன்பாக இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா என இப்போது யோசனை செய்து என்ன பயன்?

ஆனாலும் தாயின் இறப்பிலே அவனுக்கு விடியலும் பிறந்தது.

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

– நயீமா சித்தீக்.

# உம்மா சும்மா இல்லை



மனிதர்கள் அனைவருக்குமே ஏதேதோ கனவுகள் இருப்பது இயற்கையே. பலருக்கு அக் கனவுகள் பலிதமாவதும் உண்டு.

இன்று காலை எழுந்தது முதலே - இல்லை இல்லை எழும்புவதற்கு முன்பே நிஹாராவுக்கு அவளது கனவு நனவானதில் பெரு மகிழ்ச்சி...

அவளால் இயல்பாகவே இருக்க முடியவில்லை.

அதிகாலை ஸுபஹுக்கு அதான் சொல்வதற்கு முன்பே எழுந்துவிட்டாள். உம்மாவுக்கும் ஆச்சர்யம்தான்.

குளித்து, தொழுது... சிறிது நேரம் குர்ஆன் ஓதி... இப்பொழுது வாப்பாவுக்கும் ஆச்சர்யம்தான்.

சூரியன் தன் பொற்கதிர்களைப் பாய்ச்சத் தொடங்கிவிட்டான்.

நிஹாரா மிக நேர்த்தியாகத் தன்னை அலங்கரித்துச் கொண்டாள்.

உம்மா சுடச்சுட இடியப்பத்தையும் கறிகளையும் மேசையில் வைத்த போது பேருக்கு இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியப்பங்களை சாப்பிட்டாள் நிஹாரா.

தனது கைப்பையை மீண்டும் திறந்து அனைத்தும் சரியாக உள்ளளவா என்று சரி பார்த்துக் கொண்டாள்.

"வாப்பா, பஸ் ஸ்டான்ட் வரைக்கும் கூட வர்றீங்களா?"

"இல்லம்மா... ஸ்கூல் வரைக்குமே வர்ரேன்... இண் டைக்கு மட்டும் பைக்கிலேயே போவம்... இரிங்க... பைக் "கீ" ய எடுத்துட்டு வர்ரேன்..."

நிஹாராவுக்கு மகிழ்ச்சி பெருகியது.

"உம்மா.... பொயிட்டு வாரேன்..." தாயிடம் விடை பெற்ற போது பெற்ற மனமும் மகிழ்ந்தது.

"அல்லாட காவல்ல பொயிட்டு வாங்க மகள்... பீ அமானுல்லா"

இன்று நிஹாரா ஆசிரிய நியமனம் பெற்று முதலாவதாக பாடசாலை போகிறாள். இது நிஹாராவின் கனவு. எப்படியாவது ஆசிரியையாக வேண்டும் என்ற எண்ணம் இன்று நிறைவேறுவதில் அவளுடன் சேர்ந்து அவளது பெற்றோருக்கும் மகிழ்ச்சியே.

பக்கத்து ஊரில்தான் நியமனம். ஏற்கனவே அந்தப் பாடசாலையைப் பற்றி நிஹாராவுக்கு நன்கு தெரியும்.

ஆரம்பப் பிரிவில்தான் அவள் பயிற்சியும் பெற்றிருக்கின்றாள்.

ஆயிற்று...

அதிபரிடம் சென்று, நியமனக் கடிதத்தைக் கொடுத்து உரிய பதிவுகளைச் செய்து விட்டாள்.

அதிபரும் ஒரு பெண்ணாகவே இருப்பது இன்று சர்வ சாதாரணமே. ஏனென்றால் ஆசிரியப் பணிக்கு தற்காலத்தில் ஆண்கள் வருவது மிகவும் குறைந்து விட்டது.

நிஹாராவுக்கு இரண்டாம் ஆண்டு "பீ" பிரிவை அதிபர் கொடுத்திருந்தார். அலுவலக உதவியாளர் நிஹாராவை அவ் வகுப்புக்கு அழைத்துச் சென்றார்.

நிஹாரா வகுப்புக்குள் நுழைந்ததும் அந்தப் பிஞ்சுகள் ஒரே முறையில் எழுந்து நின்று ஸலாம் சொன்னார்கள். பதில் ஸலாம் கூறியவள் பிள்ளைகளை உட்காரச் சொல்லி தானும் உட்கார்ந்து வகுப்பை ஒரு கண்ணோட்டம் விட்டாள்.

கள்ளங்கபடமில்லாத முகங்கள்... புதிய ஆசிரியையைக் கண்ட சில முகங்களில் இனந் தெரியாத பயம்... இத்யாதி.

நிஹாரா எழுந்து மேசைக்கு முன்னால் நின்று கொண்டு,

"இப்போ ஒவ்வொருத்தரா உங்கட பேர், உம்மா, வாப்பா பற்றி சொல்லுங்க பாப்பம்" என்றாள். பின்வரிசையிலிருந்தே தொடங்கினாள்.

"மெடம்... ஏன்டபேர் ரினோஸா. வாப்பா கட வெச்சிரிக்கார். உம்மா வூட்டுல சும்மா இரிக்காங்க"

"மெடம் ஏன்ட பேர் ஸுபைர். வாப்பா சவூதியில. உம்மா வூட்டுல சும்மா இரிக்காங்க."

"மெடம் ஏன்ட பேர் ரிமாஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பா தோட்ட வேலை செய்வாரு... சில நாளைல உம்மாவும் தோட்ட வேலை செய்யப் போவாங்க..."

"மெடம் ஏன்ட பேர் காமிலா... டெடா கிராம சேவகர். எல்லாரும் அவர ஜீ. எஸ். எண்டு கூப்பிடுவாங்க. மமி என்டா வூட்டுல சும்மாதான் இரிக்காங்க."

இரண்டு வரிசை பிள்ளைகள் தங்களை அறிமுகப்படுத்தி விட்டார்கள்.

மூன்றாவது வரிசையில் இருந்த முதலாவது மாணவன் எழுந்தான்.

எழும் போதே ஒரு வேகம். ஏனையவர்களின் தொனியை விட மிக உயர்ந்த தொனியில் பேசத் தொடங்கினான்.

"மெடம்.
நான் ஹிஸாம். ஏன்ட வாப்பா மெனேஜரா இரிக்கார். ஏன்ட உம்மா... உம்மாதான் மிச்சம் வேல செய்யிறாங்க.

பின்னால் திரும்பிப் பார்த்துச் சொன்னான்.

"மெடம்... பின்னுக்கு உள்ள வங்க எல்லாரும் பொய் சொல்றாங்க. உம்மா எல்லாம் சும்மா இரிக்கிறவங்க இல்லை. அவங்க தான் கூட வேல செய்யிறாங்க."

நிஹாரா ஊக்கப்படுத்தினாள்.

"சொல்லுங்க ஹிஸாம்... பயப்படாம சொல்லுங்க..."

"மெடம். ஏன்ட உம்மா பாவம் மெடம். நாங்க எல்லாம் எழும்ப மொதல்லயே எழும்பிடுவாங்க. அப்ப வேல செய்யத் தொடங்கினா நாங்க படுத்த பொறகும் வேல செய்வாங்க. மெடம்... ஏன்ட உம்மா சும்மா இல்ல... ஏன்ட உம்மா சும்மா இல்ல... அவங்கதான் கூட வேல செய்யிறாங்க... வாப்பா மெனேஜரா ஒரு வேல மட்டும் தான் செய்றார்.

மேலே பேச முடியாது அவன் அழத் தொடங்கிவிட்டான். நிஹாரா அவனருகில் சென்று அவனை ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

நிஹாராவுக்கும் ஏதோ ஒன்று நெஞ்சைச் சுட்டது.

"சே... நானும்தானே 'உம்மா சும்மாதான் இரிக்காங்க' என்று சொல்லி இருக்கேன். நான் மட்டுமா உத்தியோகம் பார்க்காத எல்லா உம்மாக்களையும் காலங்காலமாக நாங்கள் 'சும்மா இருப்பவர்கள்' என்ற முத்திரையைக் குத்தித்தானே இனங்காட்டுகின்றோம். இந்தப் பிஞ்சுக்குச் சிந்திக்கத்தெரிந்தது கூட எங்களுக்குத் தெரியாமல் போய்விட்டதே"

நிஹாரா தனது பணி தொடங்கிய நாளிலேயே நல்ல தொரு பாடத்தைக் கற்றுவிட்டாள்.

"என்னருமை உம்மாவே... இத்தனை வருஷங்களாக நீங்கள் சும்மா இருக்கவில்லையே... பலரிடம் நானும் 'உம்மா சும்மாதான் வீட்டிலே இரிக்காங்க' என்ற பொய்யைத்தானே சொல்லி இரிக்கேன். மன்னிச்சுக் கொள்ளுங்க உம்மா"

மானசீகமாக நிஹாரா மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முன்னணி பெண் சிறுகதை எழுத்தாளர்

# நயீமா சித்தீக்.

இவரது பிறப்பிடம் பதுளை - ஹப்புத்தளை. பண்டாரவளை சாஹிராக் கல்லூரி, ஹப்புத்தளை தேசிய பாடசாலை, காத்தான்குடி மத்திய கல்லூரி, பசறை மத்திய கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமாணிப் பட்டத்தையும், கல்வித் துறை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். 1970 ஆம் ஆண்டில் ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

இவரது முதல் ஆக்கம் தினகரன் பத்திரிகையில் 1960இல் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து சிறுகதைகள், உருவகக் கதைகள், குட்டிக்கதைகள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள் என இவரது ஆக்கங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரலாயின.

ஆரம்பத்தில் நயீமா ஏ. பஷீர் என எழுதிவந்த இவர் திருமணத்தின் பின்பு நயீமா சித்தீக் என்ற பெயரில் எழுதத்தொடங்கினார். சுமார் 800 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் 4 நாவல்களையும் 100இற்கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளியிட்ட நூல்கள்:**

1. வாழ்க்கைப் பயணம் (1975) நாவல் (வீரகேசரி பிரசுரம்.) இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளரின் முதல் நாவல்.
2. வாழ்க்கைச் சுவடுகள் (1989) முதலாவது சிறுகதைத் தொகுதி.
3. வாழ்க்கை வண்ணங்கள் (2004) 2ஆவது சிறுகதைத் தொகுதி.
4. வாழ்க்கை வளைவுகள் (2005) 3ஆவது சிறுகதைத் தொகுதி.
5. ஆயிரம் வினாக்களும் விடைகளும் (தமிழ் பாட நூல்)
6. சீறாப்புராணம் நபி அவதாரப் படலம் (தமிழ் பாட நூல்)

**கிடைத்த விருதுகள்:**

1. நஜ்முல் அதீப் (இலக்கியத் தாரகை) - 1991 (முஸ்லிம் சமயக் கலாசாரத் திணைக்களம்)
2. சிறுகதை செம்மணி - 2004 (சிந்தனை வட்டம்)
3. கலாபூஷணம் - 2005 (இலங்கை அரசு), இன்னும் பல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரம்

கருத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் சொந்தமான உரிமை. ஒருவரின் கருத்தை ஏற்பதும் விடுவதும் சுய உரிமை சார்ந்தது. கருத்துக்களை திணிப்பது தவறானது. கருத்துக்களை கருத்துக்களால் எதிர் கொள்ளும் சந்தர்ப்பங்களில் நிதானமும் அவதானமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். கருத்துக்களை பரிமாறும் சந்தர்ப்பங்களில் வரம்பு மீறல்களை அவசியம் தவிர்க்க வேண்டும்.


சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை பரிமாறும் போது வீண் தர்க்கம், விதண்டாவாதம், தீய சொல்லாடல்களைத் தவிர்க்க வேண்டும். முன்வைக்கப்படும் கருத்துக்கள் உண்மையானதாக அமைந்திருக்க வேண்டும். பொய்யான கருத்துக்களை பரிமாறுவதை விட அமைதியாக இருப்பது சிறந்ததாகும். அவதூறான கருத்துப் பரிமாற்றம் ஆபத்தானது. தமது கருத்தை ஏற்காதோரை தவறாக விமர்சித்து அல்லது அவமானப் படுத்துவது ஏற்புடையதல்ல. தமது கருத்துக்களில் தவறிருந்தும் தனது கருத்தே சிறந்தது என வாதாடக் கூடாது. தனது கருத்து உண்மையாக இருப்பின் அதை பல தடவை அழகிய முறையில் தெளிவுபடுத்த முனைவது பிழையாக அமையாது.

ஒருவரின் கருத்துக்களுக்கு கருத்தாடல்களை கூறவேண்டிய சந்தர்ப்பங்களில் கூறாது பின்னர் உரியவரை தவறாக விமர்சிப்பது சிறப்பானதாக அமையாது. ஒருவர் வெளியிடும் கருத்துக்கள் அவரை சமூகத்தில் அவரின் தன்மைகளை வெளிப்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்வோம்.

**- நழீம் ஹனீபா, ஒலுவில் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வரவு




நூல் : அனர்த்தங்களும் நாமும்
ஆசிரியர் : றாசிக் நபாயிஸ்
பதிப்பு : அக்டோபர் 2024
பக்கங்கள் : 144
வெளியீடு : ஆவணக் காப்பகம், மருதமுனை.
வடிவமைப்பு மற்றும் அச்சு: மிஸ்டர் லுக், மருதமுனை.
விலை : ரூபா 800

## அனர்த்தங்களும் நாமும்

சமூகப்பணியாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான றாசிக் நபாயிஸ் அவர்களின் ஆறாவது நூல் **அனர்த்தங்களும் நாமும்** என்பதாகும். ஏற்கனவே இவர் எழுதி வெளியிட்ட ஐந்து நூல்களும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

நூலாசிரியரின் பெரியப்பாவாகிய மருதமுனையின் மூத்த கல்வியாளர் காலஞ்சென்ற அல்-ஹாஜ் ஏ. ஆர். அப்துல் அஸீஸ் அவர்களுக்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்திருப்பது மெச்சத்தக்க விடயமாகும்.

இலங்கை வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்கள சிரேஸ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் அவர்களின் அணிந்துரை, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் எம். அன்வர் முறாத் அவர்களின் அறிமுகவுரை, இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் கபூர் நிஜாமிர் அவர்களின் மதிப்புரை, கலாநிதி ஏ. ஏ. எம். நுபைல் அவர்களின் ஆசியுரை என்பன நூலுக்கு வலுவூட்டுகின்றன.

“அனர்த்தங்களை அறியும் வழிகாட்டி” என்ற தலைப்பில் ஆசிரிய வளவாளர், வருகைதரு விரிவுரையாளர், இலக்கிய ஆய்வாளர், எழுத்தாளர் ஜெஸ்மி எம் மூஸா அவர்களின் பார்வை நூலின் சிறப்பைப் பறைசாற்றுகிறது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

– கிண்ணியா சபீனா.

# தடம் மாறாப் பயணம்

வழமையாகத் தஹஜ்ஜுத் தொழுகைக்கு நான்கு மணிக்கெல்லாம் எழும்பும் ஹலீமாவுக்கு அன்று எழும்ப முடியாமற் போயிற்று! பாங்கொலி கேட்டுத் திகைத்தாளவள்!

"யா அல்லாஹ்! இண்டைக்குத் தஹஜ்ஜுத் கிடைக்காமல் போயிட்டுதே!" என்று வருத்தப் பட்டுக் கொண்டாள்! பக்கத்து வீட்டுப் பரீனாவுக்கு மாவு வறுத்துக் கொடுத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு, வீட்டு வேலைகளையும் முடித்த பின்னர் தூங்கச் செல்லும் போது நேரம் நள்ளிரவு ஒரு மணியைத் தாண்டியிருந்தது! அதனால், அசந்து தூங்கிவிட்டார் தாய் ஹலீமா!

"மகள் ஹனா! எழும்புங்கம்மா! இடியப்பம் அவிக்க கொஞ்சம் உதவுங்கம்மா!" என்றார்!

எழுந்து கொண்ட ஹனா "சரிம்மா!" என்றவாறு காலைத் தொழுகைக்கு ஆயத்தம் செய்தாள்! தொழுகை முடிந்ததும், அடுப்படிக்குள் நுழைந்து தாயாருடன் இணைந்து கொண்டாள்! இரண்டு அடுப்புக்கள் எரிந்தன! உமி மரத்தூள் சேர்த்து எரிந்தது ஒரு அடுப்பு! விறகிலே எரிந்தது இன்னொரு அடுப்பு! இரண்டு அடுப்புகளிலும் வெந்து முடிந்தன அவர்களின் இடியப்பங்கள்!

உரலில் இட்ட மாவைப் பிழியும் போது தன் இதயத்தில் உறைந்த வேதனைகளையும் ஹலீமா பிழிந்து விடுவாள்!

"என் கண்ணான கண்ணாளன் கண் கலங்காமற் கனிவு காட்டி வந்தான்!"

"நான் வாழும் காலமெல்லாம் எனக்கு அவரோடு வாழும் பாக்கியம் கிடைக்கவில்லையே!" என ஏக்கப் பெருமூச்சு விடுவாள்! யாருக்கும் தெரியாமலே, அந்த மூச்சுடன் சேர்ந்து அவளின் வேதனையின் வெப்பமும் காற்றுடன் கலந்து விடும்!

அவர்களது அன்றைய வேலைகள் முடியும் தறுவாயில் காலை ஏழு மணியாகியது!

"மகள் ஹனா! நீங்க வெளிக்கிடுங்கம்மா! மிச்ச வேலைகளை நான் பார்த்துக் கொள்ளுவேன்!" என்றார் தாய் ஹலீமா!

ஹனா அவசர அவசரமாக ஆயத்தமாகிக் கொண்டு, பாடசாலைக்குக் கிளம்பினாள்!

"மகன் நவாஸ், சபீக் மாமாட கடையிலே இடியப்பப் பார்சலைக் குடுத்துட்டுப் போங்க ராஜா!" என்றார் தாய் ஹலீமா!

"சரிம்மா தாங்க!" என்றவாறு பார்சலையும் பெற்றுக் கொண்டு பாடசாலைக்கு ஓடினான், ஹலீமாவின் இளையவன் நவாஸ்! வேலைகளை முடித்துக் கொண்டு தானும் ஆயத்தமாகிக் கொண்டு விரைந்தார் ஹலீமா!

அந்தப் பாலர் பாடசாலையின் பொறுப்பாளர் என்ற வகையில் ஹலீமா அங்கு தனது கடமைகளைத் தொடங்கினார்!

வஞ்சகமில்லாப் பிஞ்சுகளுடன் அவளுடைய நேரம் போவதே அவளுக்குத் தெரிவதில்லை! உண்மையில் அவளது மனது இன்னும் இளமையாக இருப்பதற்கு அவள் ஒரு நேசரி ஆசிரியர் என்பதும் காரணமாகும் என்பதில் ஐயமில்லை!

அங்கு ஆடல் பாடல், வரைதல் போன்ற மாணவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் மகிழ்ச்சியோடு இடம்பெறுவது வழக்கம்! மாதாந்த மாணவர் மன்றம், பெருநாட் கொண்டாட்டங்கள், களப்பயணங்கள், வருடாந்தச் சந்தை, பரிசளிப்பு விழா போன்ற சிறப்புச் செயற்பாடுகள் அங்கு இடம் பெறும்! சமூகத்தில் முன்னுதாரணமாக இயங்கும் அந்தப் பாலர் பாடசாலையில் வருடா வருடம் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து கொள்வார்கள்!

இடைவேளை மணி ஒலித்ததும், "சுகா டீச்சர்! பிள்ளைகளுக்கான உணவை எடுத்துக் குடுங்க டீச்சர்!" என்றார் ஹலீமா டீச்சர்!

சுகாவும் தன் கடமைகளைச் செவ்வனே செய்து முடித்தாள்!

முன் பள்ளிச் சின்னஞ் சிறார்களின் வண்ணங்கள் இன்னு மின்னும் ஹலீமாவின் எண்ணங்களைச் சிறக்கச் செய்திடும்! பள்ளி விடும் நேரம் பெற்றோர்கள் வந்து, படலையடியில் நிற்பது கண்டு அந்தப் பிஞ்சுகள் மகிழ்வார்கள்! பள்ளி விட்டதும் பெற்றோரிடம் அவர்களைப் பக்குவமாய் ஒப்படைத்து விட்டு, மீதிக் கடமைகளையும் முடித்துவிட்டு, ஒரு மணிக்கெல்லாம் வீடு நோக்கிப் பறந்திடுவாள் ஹலீமா!

அந்தச் சம்பவம் நடக்கும் போது, மூத்தவன் சலீம் கல்விக் கல்லூரியில் முதலாம் வருடத்திலும், இளையவன் பாடசாலையில் பத்தாம் தரத்திலும், அன்பு மகள் ஹனா ஐந்தாம் தரத்திலும் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர்! அன்று மனமுடைந்து போய், அடியற்ற மரமாய்க் கிடந்தாள் ஹலீமா! சொந்தமாக இல்லம் கூட இல்லை! என்றாலும், விவசாயம் செய்து வாழ்வினை மகிழ்வுடன் கொண்டு சென்றவர் தான் ஹலீமாவின் கணவர்! வயலுக்குச் சென்று அறுவடைக்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்த போதுதான் காலன் அவரைக் கவர்ந்து கொண்டான்! செய்தி கிடைத்ததும் மீளாத் துயரிற் துடித்தாள் ஹலீமா!

காதலித்துக் கல்யாணம் செய்த அவர்களுக்கு, அடையாளமாக மூன்று பிள்ளைகள் பிறந்தனர்! எல்லோரையும் அவர் விட்டுச் சென்று மாதங்கள் ஆறு கடந்தன!

அன்றாடச் செலவைச் சமாளிக்க, அவளிடம் இருந்த நகைகள் எல்லாம் கடைக்கு நகர்ந்தன! இனி விற்பதற்கு ஒன்றுமில்லை! மூன்று நேரம் என்றிருந்த உணவு இரண்டு நேரமாகியது! முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அரசுச் சம்பளம் என்று பெரிதாகக் கிடைப்பதில்லை!

"நம்ம சம்பளம் குடும்பச் செலவுக்குப் போதாது! ஹலாலாக எதாவது வருமானம் தேட வேண்டும்!" என்று முடிவு எடுத்தாள் ஹலீமா!

மூத்த மகன் சலீமிடம், "மகன் சின்னதா எதாவது உணவுப் பண்டங்கள் செஞ்சி விற்கலாமா ராஜா!" என்று அழகாகக் கேட்டாள்!

"என்னம்மா செய்யப் போறீங்க!"

"நம்ம அப்பம், இடியப்பம், இட்லி, இப்புடி செஞ்சி விற்கலாம் தானே மகன்!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இப்ப காலைச் சாப்பாடு செய்றது வேலைக்குப் போறவங்களுக்குக் கஷ்டம் தானே! அதனாலே நிறையப் பேர் நம்மளுக்கிட்ட சாப்பாடு வாங்குவாங்க மகன்!” என்றாள் ஹலீமா!

பெற்ற தாய் கஷ்டப்படுவது சலீமுக்குக் கொஞ்சமும் விருப்ப மில்லைதான்! கொஞ்ச நேரம் பதில் எதுவும் சலீம் சொல்லவில்லை!

“நீ ஒன்றும் யோசிக்காதே ராஜா! நம்ம வறுமை போக, நாமதான் உழைக்கணும்!” என்றவாறு பதிலை எதிர்பாராமற் குசினிக்குள் சென்றாள் ஹலீமா!

“உம்மா நீங்க கஷ்டப் படாதீங்கம்மா!“

“வாப்பா போன அன்றே நான் உம்மாவைக் கண் கலங்காமப் பாப்பேன் வாப்பா! என்று, வாப்பாக்கிட்ட சொல்லிட் டேனும்மா!” என்று மனசுக்குள் சொல்லிக் கண்ணீர் வடித்தான் சலீம்!

“இனி என் தாயின் உழைப்பு ஆரம்பமாகப் போகுது! பாவம் உம்மா! யா அல்லாஹ்! நான் எங்க உம்மாவைக் கஷ்டப்பட விடமாட்டேன் அல்லாஹ்” என்று சொல்லி அழுது வேதனையிற் துடித்தான்!

“என்னாலான முழு உதவியையும் நான் செய்வேன்!” என்று திட சங்கற்பம் பூண்டான்!

ஹலீமா தன் தொழிலைச் சின்னதாகவும் நேர்த்தியாகவும் தொடங்கினாள்! காலையிலும் மாலையிலும் ஹலீமாவின் வீட்டு உணவுப் பார்சல்கள் விற்பனையாகின! தாய்க்குப் பிள்ளைகளும் சேர்ந்து உதவினர்! தங்களின் பசி போக்கவும் அந்த உணவுகள் உதவின! கிடைக்கும் வருமானம் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கு ஓரளவு போதுமாக இருந்தது! “போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!” எனும் பக்குவம் அங்கு மேலோங்கி நின்றது! அவர்கள் வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்தனர்!

சலீம் கல்லூரிப் படிப்பு முடிந்ததும், தாயாரின் தொழிலை இன்னும் கொஞ்சம் பெரிதாகச் செய்யும் வழிகளைக் கையாண்டான்! பின்னேரங்களில் தன் வீட்டுக்கு முன்னாலே ஆப்பம் சுட்டு விற்றான்! தம்பியின் உயர்கல்விக்கும் உதவினான்!

காலச்சக்கரம் உருண்டது! கணவனின் பிரிவுக்குப் பின்னர் ஹலீமா, தன் வாழ்வில் இருபத்தைந்து வருட காலமாக இறைவனின் உதவி தேடி வருந்தி உழைத்து வாழ்ந்தார்! தன் செல்வங்கள் இன்று சமூகத்திற்குப் பணியாற்றப் புறப்பட்டு விட்டார்கள்! அது அவளுக்கு நிம்மதியையும் மனமகிழ்வையும் அள்ளி வழங்குகின்றது! அது மட்டுமல்லாமல், அடுத்த சந்ததியான பேரப் பிள்ளைகளும் இன்று கல்வியைத் திறம்படப் பெற்றுள்ளனர்! இன்னும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்! இதற்கெல்லாம் காரணம் ஆண்டவனின் அருளும் அயராத முயற்சியும், பொறுமையுமே என்றெண்ணிடுவாள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் மூத்த மகன் சலீம், அக்குடும்பத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்தவன்! தகப்பனை இழந்த பின்னர் தாயாருக்கு ஆறுதலாய் நின்று கொண்டே தன் கல்வியைத் தொடர்ந்தவன்! கல்லூரி விடுமுறை நாட்களில் கடற்கரைக்குச் சென்று தொழில் புரிந்து கறியும் காசும் கொண்டு வருவான்! கண்மணியான தங்கை ஹனாவையும் கண் கலங்காமற் கவனிப்பான்!

கைம்பெண் ஹலீமா தன் மக்களைக் கண்மணிகள் என்றே காத்து வந்தாள்!

அவள் அந்தப் பொன் மணிகளின் மதிப்பையும் பெறுமதியையும் உலகில் இன்னும் உயர்த்திடவே பாடுபட்டாள்! ஐந்து வேளையும் தொழுகை பேணவும் நண்பர்களோடு அளவாகப் பழகவும் ஓய்வு நேரங்களில் புத்தகங்களுடன் உறவாடவும் அவளின் மக்கள் விரும்பினர்!

பல்வேறு சவால்களை எதிர் கொள்ளும் போதும் தகப்பன் இல்லாத குறையை அவர்கள் உணரும் போதும், தாயார் வேதனைப் படக்கூடாது! என்பதில் அவர்கள் கவனமாக இருந்தனர்!

"பிள்ளைகள் தகப்பன் இல்லையே என வருந்தக்கூடாது!" எனத் தாயும் அன்பு காட்டினாள்! மூத்தவன் சலீம். "தன் சகோதரர்கள் பிழைவிடக்கூடாது!" என்பதிலே கண்ணும் கருத்துமாய் இருந்தார்! அரைப்பட்டினி, முழுப்பட்டினிகளை அவர்கள் சந்தித்த போதும் கௌரவம் பாதிக்கப் படக்கூடாது என்பதிற் கவனமாய் நடந்து கொண்டனர்! கூலி வேலை செய்தாலும் பிறரிடமிருந்து இலவசமாகப் பெறுவதைத் தவிர்த்தனர்!

"உம்மா சுஹைலா வெளிக் கிட்டாச்சு!"

"நீங்க ஒங்கட குளிசை மருந்தெல்லாம் எடுத்திட்டீகளாம்மா!"

சிந்தனை கலைந்து எழுந்தார் ஹலீமா டீச்சர்!

"எடுத்து வெச்சிட்டேன் ஹனா!"

"எங்கேம்மா தம்பி வந்திட்டா ராம்மா!" என்று இளைய மகன் எஞ்சினியர் நவாஸை விசாரித்தார் தாய் ஹலீமா!

"நானாவும் மதினியும் வந்திட் டாங்கம்மா!" என்றாள் ஹனா டீச்சர்!

ஹலீமாவின் மூத்த மகன் சலீம் மாஸ்டரின் மகளுக்குப் பல்கலைக் கழகம் செல்வதற்கான அனுமதி கிடைத்துள்ளது! அங்கு அவளைக் கூட்டிச் செல்ல அந்தக் குடும்பம் ஆயத்தமானது! போட்டியும் பொறாமையும் நிறைந்த இந்த உலகிலே, அவர்கள் ஒற்றுமையாகச் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்! அவர்களுக்கு இறைய ருளும் தாயாரின் அழகிய வழி நடத்தலும் வரங்களாய் அமைந்தன!


"தன் கண்மணிகள் கல்வியின் மூலம் தடம் மாறாப் பயணங்களிற் சென்று கொண்டிருப்பது தன் கணவனின் கனவை நனவாக்குகின்றன!" என எண்ணி ஆனந்தம் அடைந்தாள் தாய் ஹலீமா!

(யாவும் கற்பனை.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்
கிண்ணியா.



# மறுமணம்

"ரொம்ப களைப்பாக இருக்கிறது. ஹதியா தாங்கம்மா. இந்தக் கடுங்கோடை வெய்யில் கடுமையாகத்தான் சுட்டெரிக்கிறது." எனப் பேசியவாறே பக்கத்து ஊரிலிருந்து ஹதியா பெற வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயோதிப பெண்மணி வாசல் படியிலேயே உட்கார்ந்துவிட்டார்.

முற்றத்து விலாட்டு மாமர நிழலும், வீட்டைச் சுற்றிவர அழகுபடுத்திக் கொண்டிருக்கும் பூஞ்செடிகளுக்கு காலையில் இறைத்த நீரின் குளிர்மையும், மெல்லிய காற்றுமாக, இந்த நேரத்துக்கு அந்த இடம் இதமாகவேதான் இருந்தது.

அவருக்கான ஹதியாவைக் கொடுத்தவாறே "ஏம்மா இந்த வயதில் இப்படி அலைகின்றீர்கள்.? உடம்பு தாங்குமா? ஏதாவது சாப்பிட்டீர்களா?" எனக் கேட்டேன்.

"பக்கத்து வீட்டு டைலர் பொடியனின் மனிசிட்ட சாப்பிட்டேன். பஸ் போறதுக்கு முன்னாடி போகணும். காலையில பஸ்ல வந்து இறங்கி இப்படியே நடந்து ஹதியா வாங்கிக் கொண்டு, திரும்பி மூன்று மணி பஸ்ஸில் போக வேண்டும். அப்போதுதான் பஸ்ஸிலிருந்து இறங்கி அங்கால எங்க வீட்டுக்கு நடந்து போய் சேர முடியும்."

"கொண்டு போகிற காசி, அரிசிக்காக மகள் காத்திருப்பா. அதன் பிறகுதான் சமைக்க வேண்டும். இடுப்பு வழக்கமில்லாத கணவனும் இரண்டு சின்னக் குழந்தைகளும் வைத்துக் கொண்டு மகள் சிரமப்படுவதால்தான் நான் இப்படி வாழ்வாதாரத்தை தேடி வர வேண்டி இருக்கிறது. முன்னர் போல் வீடுகளுக்கு சென்று கூலி வேலை செய்து சம்பாதிக்கவும் எனது உடல் ஒத்துழைப்பதில்லை" என்றார்.

"மருமகனுக்கு ஏன் இடுப்பு வழக்கமில்லை?" எனக் கேட்டேன்.

"தென்னந் தோட்டத்தில் தேங்காய் பறிக்கும் தொழில். தவறி விழுந்து விட்டார். ஆஸ்பத்திரியும் வீடுமாக அலைந்து, இப்போது நிரந்தரமாக வீட்டிலே படுத்துவிட்டார். என்ன செய்வது அவருக்கும் சேர்த்து நான்தான் உழைக்க வேண்டி இருக்கிறது" என்றார்.

"கணவர், வேறு ஆண் பிள்ளைகள், உறவுகள் இல்லையா?" என விசாரித்தேன்.

"எல்லாம் இருந்தும் என்ன பிரயோசனம். இப்படி நாலு வீட்டு வாசல் படி ஏறி இறங்கினால்தான் அரை வயிறு கஞ்சியாவது சாப்பிட முடியும். அதுவும் மழை நாள் அல்லது உடம்புக்கு முடியாமல் போகும் நாட்களில் ஒன்றுமே இல்லை. நான்கு ஐந்து முருங்கைக்காய் கிடைத்தாலாவது இரவைக்கு கொண்டு போய் சமைக்கலாம்" என்றார்.

"எனது தோட்டத்தில் பறித்து கொண்டு போங்களேன்" என்றேன்.

"இல்லம்மா. நீயே உன் கையால பறித்துத்தாமா. இன்னொருத்தர் மரங்களில் பொருள்களில் கைவைக்கும் பழக்கம் எல்லாம் இல்லம்மா." என்றவரின் பேச்சில் நான் அசந்தே போய்விட்டேன். இவ்வளவு இயலாமையிலும் தள்ளாமையிலும் எவ்வளவு உறுதியான கவுரவப் பேச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரிமா. நானே பறித்துத் தருகிறேன்” என, காய் பறித்தவாறே அவரின் கடந்தகாலம் பற்றி மெதுவாக வினவினேன். அவர் கூறிய பதிலில் ஆடிப் போய்விட்டேன்.

“ஒரு மீனவக் கிராமத்தில் ஏழை மீனவனுக்கு வாழ்க்கைப் பட்டு ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி, சந்தோசமாகவே வாழ்ந்து கொண்டிருந்த நேரம், கணவனாருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு சில நாட்களில் மரணித்தும் போகவே எட்டு வயதுப் பெண் குழந்தையுடன் விதவையாகி விட்டேன். மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்ததால் எல்லோருமே கூலி தொழிலாளர்கள். அன்றன்று உழைத்து சாப்பிடக் கூடியவர்கள். நானும் விதவையானாலும், கூலித் தொழில் செய்துதான் சாப்பிட்டு வர வேண்டிய சூழல். இதற்குள் மகளின் பாடசாலைச் செலவுகளுமாக மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில்தான் காலம் சென்றது.”

“எனது இளமையும், விதவைக் கோலமும் பலரது கழுகுக் கண்களுக்கு தீனியாகவே தெரிந்தது. வேலை தேடிச் செல்லும் வீடுகளிலும் பெரும் தொந்தரவு. இப்படி இருக்கையில் கையில் இருக்கும் பெண் குழந்தைக்கு முடி வெட்டுவதற்காக செல்லும் நேரம், முடிவெட்டும் மர்சூக் நானாவின் கண்களிலும் நான் மாட்டிவிட, மர்சூக் நானா நேரடியாகவே திருமணம் முடித்துக் கொள்கிறேன் என்று கேட்டு விட்டார். 6, 7 வயது இளமையான மர்சூக் நானா என்னைக் கல்யாணம் முடிக்க கேட்டவுடன் எனக்கும் சங்கடமாகிவிட்டது.”

“நான் யோசிக்கவே, ஒன்றும் யோசிக்காதீங்க. நானும் மனைவியை இழந்தவன். ஆறு குழந்தைகளுடைய தகப்பன். பிள்ளைகளின் பராமரிப்புக்காக, அவர்களுக்கு உணவு, சமையல், எனது தொழில் என மிகவும் கஷ்டப்படுகிறேன். தொழில் நன்றாகத்தான் இருக்கிறது. அதனால் பிள்ளைகளை வளர்க்கவும், எனக்கும் அன்பான ஒரு வாழ்க்கைத் துணைக்காகவும் மறுமணம் செய்வதைத்தவிர வேறு வழியில்லை. அது குழந்தையுடன் இருக்கும் நீங்களாக இருந்தால் சிறப்பாக இருக்கும் எனப் பேசி ஒருவாறு எனது மனதை மாற்றிவிட்டார்.”

“தனித்து வாழ்வதை விட பாதுகாப்புடன் கூடிய குடும்பம். என்னை போலவே அவரும் வாழ வேண்டிய வயதில் வாழ்க்கைத் துணை இழந்து சிரமப்பட்டவர். இருவருக்குமே இத் திருமணத்தின் மூலம் ஆறுதல் கிடைக்கும் என்று சந்தோசமாகவே திருமணம் செய்து கொண்டோம்.”

“எனது பயமும் கவலையும் தீர்ந்தது. அவரின் சுமையும் குறைந்தது. அவர் பக்கத்து ஊரில் சிறிய கடை வாடகைக்கு எடுத்து, முடிவெட்டி உழைக்கும் சம்பாத்தியத்தில் ஓரளவு குடும்பம் நடத்தினாலும், போகப்போக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நடவடிக்கைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. வீட்டில் தரும் பணமும் குறைந்து சாப்பாட்டுக்கே பெருந்திண்டாட்டம். பிள்ளைகளும் 'மாற்றான் தாய்' தங்களுக்கான எதையும் சரியாகச் செய்யவில்லை என இவருடன் நாளாந்தம் ஏதாவது சண்டை, வம்பு என ஆரம்பித்து விட்டார்கள். கணவர் வீட்டில் தங்குவது குறைந்து கொண்டே போனது. எங்களுக்குள்ளும் இடைவெளி அதிகரித்துக் கொண்டே சென்றது. வீட்டு வேலை, பிள்ளை பராமரிப்புடன் காலம் கடந்து கொண்டிருந்தது."

"பெரிய பையன்கள் பாடசாலைக்கும் செல்வதில்லை. எனது பேச்சுக்களை பொருட்டாக மதிப்பதும் இல்லை. அவர்களுக்கு தேவை உணவு மட்டுமே. அதை மட்டும் எடுத்துக் கொண்டு தங்கள் பணத் தேவைக்கு மீன்பிடிக்கச் செல்வோருடன் சகவாசம். தகப்பனாரோ இதையெல்லாம் கவனிப்பதே இல்லை. ஏதாவது அவரிடம் சொன்னால் எல்லோருக்கும் அடி, ஏச்சு, பேச்சு. வீட்டில் ஒரே களேபரம் தான்."

"எனது மகளுடனும் கணவரின் பிள்ளைகள் ஒட்ட மறுத்து மகளும் முரண்டு பிடிக்கவே, தவித்துதான் போனேன்." என்று கூறி சேலைத் தலைப்பால் முகத்தை அழுத்த துடைத்துக் கொண்டே மீண்டும் தொடர்கிறார்.

"வீட்டில் வர வர கணவனின் வரவு தாமதமாகிக் கொண்டே வந்தது. சில சமயங்களில் இரவு வருவதும் இல்லை. கேட்டால் கடையில் நேரம் போய்விட்டது. நண்பனுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு அப்படியே தூங்கிவிட்டேன், என சாக்குப் போக்குச் சொல்லி சமாளித்து விடுவார். சில வருடங்களின் பின்னர் அவரது சுயரூபம் தெரியவர அதிர்ந்து போனேன்."

"பிள்ளைகளை எனது தலையில் கட்டிவிட்டு பக்கத்து ஊரில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான மாற்று மத இளம் பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பால், அந்தப்பெண்ணின் ஊரவர்களிடம் பிடிபட்டு, பள்ளியில் ஒப்படைத்து, அந்தப் பெண்ணும் இஸ்லாத்தைத் தழுவி இவரையே திருமணம் செய்து கொண்டிருப்பதாகவும், ஒரு பெண் குழந்தையும் இவருக்குப் பிறந்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இது பற்றி அவர் வரும்போது விசாரித்து, வாக்குவாதம் நிகழ்ந்ததிலிருந்து வீட்டுக்கு வருவதையும் முற்றாக நிறுத்திவிட்டார்."

"பிறகு என்ன? பிள்ளைகளும் அவர்கள் வயதுக்கு மீறி, ஆளுக்கு ஒரு துணையை தேடத் தொடங்கி விட்டார்கள். என்னால் எதுவுமே பேச முடியவில்லை. வீட்டில் அவர் மகளும் ஒரு துணையை தேடிக் கொள்ளவே எனது வளர்ந்த மகளுடன் நான் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது."

"வீட்டு வேலை செய்து கொடுக்கும் சல்மா தாத்தாவிடம் உதவி கோரி முறையிட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் தென்னந்தோப்பில் உள்ள சிறிய தகர வீட்டை ஒழுங்கமைத்து தந்தார்கள். நானும் எனது மகளும் அங்கே போய் விட்டோம்."

"அப்போ உங்கள் திருமண வாழ்வு?" என்றேன்.

"திருமண வாழ்வா? அது எங்கே இருந்தது? இல்லாமல் போக" என்றார்.

எவ்வளவு அர்த்தமுள்ள பேச்சு. அவருக்கு தேவைப்பட்டதெல்லாம் அந்த நேரம் அவருக்கான ஆறுதலும், அவருடைய ஆறு பிள்ளைகளுக்குமான ஒரு பராமரிப்பாளரும் தான்.

"விதவையான எனக்கு அவர் மறுவாழ்வு கொடுத்தாரா? அல்லது மனைவியை இழந்த அவருக்கும், தாயை இழந்த அந்த பிள்ளைகளுக்கும் எனது இளமையும் உழைப்பும் பயன்படுத்தப் பட்டதா? என்பது தான் தெரியவில்லை."

எனப் பேசிக்கொண்டே, வீங்கிப் போய் இருந்த தனது இரு கால்களையும் நீவிக் கொண்டிருந்த அவரை ஆச்சரியமாகவே என்னால் பார்க்க முடிந்தது.

"கொஞ்சம் காலத்துக்கு பிறகு அந்த தென்னந்தோப்பில் தேங்காய் பறிக்கும் பொடியன், எனது மகளை விரும்பி கேட்கவே 'ஏழைக்கேற்ற எள்ளுருண்டை' என்று அவனுக்கே திருமணம் முடித்துக் கொடுத்துவிட்டேன். கொஞ்ச காலம் அவர்களும் சந்தோசமாக வாழ்ந்து இரண்டு பிள்ளைகளையும் பெற்றுவிட்டாள் எனது மகள். ஆனால் மருமகன் இப்போது படுக்கையில் இருப்பதால் மீண்டும் எங்களது வாழ்வியல் போராட்டம் தொடங்கி விட்டதும்மா." எனக் கூறும் அவருக்கு என்னால் ஒன்றுமே பேச முடியவில்லை.

'விதவைக்கு வாழ்வு கொடுங்கள்', 'அனாதைக் குழந்தைகளை ஆதரியுங்கள்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்த அழகிய இஸ்லாமிய வாழ்வை இப்படியும் கொச்சைப்படுத்தி பாவத்தைத் தேடிக் கொள்ளும் சில பொறுப் புணர்ச்சியற்ற ஆண்கள் சமுதாயம் எப்போதுதான் மாறப் போகின்றதோ தெரியவில்லை.

"உன்னுடன் பேசிக் கொண்டிருந்து நேரம் கடந்து விட்டது. இனி பஸ் பிடிக்க இந்த வீங்கிய காலுடன் அவசரமாக நடக்கவும் முடியாது. ஆட்டோ பிடித்துத்தான் பஸ் ஸ்டாண்டுக்கு போக வேண்டும்." எனக் கூறிக் கொண்டே செல்லும் அந்தப் பெண்மணியைப் போன்று எத்தனையோ பெண்கள் நம் இஸ்லாமிய சமுதாயத்தில் இருப்பது வேதனைக்குரிய விடயமே.

'மறுமணம் பெண்ணுக்கான பாதுகாப்பு' என்பது இங்கு கேள்விக் குறியாகவே மாறிப் போன அவலம் நம் சமுதாயத்துக்கான பெரும் சாபக்கேடு தான்.

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டே வருக.

இலக்கிய வித்தகர்
- தம்பிலுவில் ஜெகா -

புத்தாண்டே வருக புதுவாழ்வு தருக
இத்தரை கண்ட இன்னல்கள் களைக
சாதிமத பேதம் சாற்றுதல் ஒழிக
ஓதிய நெறியில் ஓர்மம் பெறுக
வயல்நிலம் குளிர வான்மழை பொழிக
இயலிசை நாடக இன்றமிழ் வளர்க
நீதிநெறி தழைத்து நிஜங்கள் வெல்க
ஏதிலார் எனும்சொல் எரியினுள் வீழ்க

மலையக மக்களின் மனங்கள் குளிர்க
நிலையான ஊதியம் நித்தம் பெறுக
யாழ்நிலம் எங்கும் யௌவனம் மலர்க
பாழ்கொண்ட காணிகள் பசுமை பெறுக
கிழக்குக் கரையில் கிளரொளி மல்க
வழக்கொழியா மரபு மாட்சி தருக
தெற்குத் திசையினில் திரவியம் குவிக
மேற்கு நிலமெலாம் மேன்மை மிளிர்க




விதவை வாழ்வில் விடிவு வருக
பதவிப் பித்தரின் கதிரைகள் உடைக
வேதனம் குறைந்தோர் வேதனை ஒழிக
மாதல முடையோர் ஏழைக்குத் தருக
இலங்கை இலக்கியம் இன்னும் வளர்க
சலங்கை மரபின் சரித்திரம் வாழ்க
மும்மொழி அறிவின் முக்கியம் உணர்க
எம்மத மாயினும் ஏற்றம் பெறுக.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்ப்புக் கவிதை

# மறக்க முடியுமா.



உன்னால் என்னை மறக்க முடியாது.
நான் இறந்த பிறகு
உன் தலையில் இருந்து
மறைந்த எண்ணற்ற மலர்களைப் போல்
நீ என்னை மறக்க முடியாது.

ஆனால் சில புயல் நாளில்
மேக அக்கினி எரியும்போது
இதழ்களைத் திறந்த பூவை போல
நான் உந்தன் உள்ளத்தில் உருகுவேன்.

பிறகு சிரித்துக் கொண்டே
புத்தகத்தை ஒரு கையால் விழ
நெருப்பின் மேல் வளைத்து
தொலைதூரப் பார்வை பார்ப்பதைப் போல்
நீங்கள் கற்பனை செய்வீர்கள்.

**- ஷாஹித் சுக்ரவர்த்தி.**

(ஷாஹித் சுஹ்ரவர்த்தி – ஆங்கிலத்தில் எழுதிய இந்திய புதுக் கவிஞர், புதிய கவிதையின் முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்.)

சிங்கள மூலம்: **பராக்கிரம கொடிதுவக்கு.**

தமிழில்: **கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்பதித்த மூத்த கவிஞர்கள்

# நன்றி மறந்தீர்

- கலாபூசஷணம் மருதூர் ஜமால்தீன்.

பணத்திற்கும் சொகுசுக்கு மடிமைபோலாய்
பருகிநற்பதவியின் தேனைச் சுவைக்க
குணத்தோரைப் புறந்தள்ளி வுள்ளங்கொன்று
குதுகலமே வாழ்வொன்றாய் உலகில் மயங்கி
பிணமாகுமுடலுக்கு ஹறாமைப் பூசி
பொய்நாவால் கதைகூறி ஏமாற்றியிங்கு
இணங்கிடா மக்களினைத் தூசாயெண்ணி
இருந்திங்குழைத்திடவா 'மன்றம்" சென்றீர்

எத்தனையோ வாக்குறுதியெங்கள் முன்னே
எடுத்தெறிந்து எம்மனதைக் குளிரவைத்தீர்
அத்தனையும் பொய்யாக்கி பதவிக்காக
அடிமைச் சாசனமா எழுதிவைத்தீர்?
பித்தர்போல் மக்களிங்கு பிதற்றிப் பதறும்
பேதமைகள் என்றெம்மைக் கழித்ததாலே
உத்தமரெம் தலைமை இல்லையென்று
உறுதியெம் சமூகத்தை விழிக்கவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்காய் பாவிகளின் பாதம்நக்கி
பரிசாகப்பெறுவீரே இன்னும் பலவாய்
உதவிகளில்லாது நாமும் தவிக்கும்
உபத்திரங்கள் இன்னுமே நாட்டில்தோன்றும்
சதிகாறர் வலைக்குள் நீர் சிக்கியெங்கள்
சன்மார்க்க வரம்புகளை மீறிவிட்டீர்
எதுயிங்கு நடந்தாலும் இறையினுதவி
எங்களை வந்தடையும் இறையோன் காவல்

உலகினைச் சதமென்றெண்ணிக் கழித்த நல்லோர்
உடையோனின் பரிசினை எளிதிற் பெற்றார்
கலகத்தீ துன்யாவின் சதியில் மயங்கா
கருத்துள்ள மார்க்கத்தில் சமூகப்பணியை
உலர்ந்திங்கு மறையுமுன் நித்தம்செய்த
உயர்பணியை அறிந்தும் நீர் அற்பவாழ்வில்
கலகத்தை விளைப்போரின் கரமிணைத்து
கதியிங்கு நடந்திட நினைத்தா நின்றீர்?

அடக்குமுறை யதிகாரம் அகம்பாவங்கள்
அகிலத்தில் நிலைத்திட்ட வரலாறில்லை
இடருகளெது வந்தும் ஈமான் கொண்டோர்
இறையுதவி பெற்றிடுவர் என்றுமவனே
தடைநீக்கி மறையேற்றோர் வாழ்வு காப்பான்
தரணியில் துஆவெனும் ஆயுதமொன்றே
இடர்காத்து நல்வாழ்வில் சுபிட்சம் சேர்க்கும்
இதையென்று முணர்வீரே பொறுமை வெல்லும்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சரி கவிதைகள்

கவிதை

- ஏ. எம். கஸ்புள்ளா.

## பாட்டி வைத்தியம்

பிறக்கும் போதே மனிதன்
இறப்பும் எழுதப் பட்டதுதான்
சிறப்பு வாழ்வு என்பதோ?
சரிதம் சுகமாய் இருத்தலே
நிரப்பமான வாழ்வு வேண்டுமா?
நீ விரும்பு பாட்டி வைத்தியம்.

பாட்டி வைத்தியம் "பலநூறு"
பகர்வேன் சிலதைக் கேளு
நாட்டில், வீட்டில் அதனால்
நாடிவரும் நோயை விரட்டு
பாட்டி வைத்தியமே! சாத்தியம்
பாரம்பரிய கை வைத்தியம்.

தொண்டை கரகரப்பா? சேர்த்துண்ணு
தேனுடன் சுக்குப் பொடி
மண்டை வலியா? துளசியுடன்
மாவாக்கி சுக்குடன் நெற்றியிலிடு
நீண்ட விக்கல் போயிடவே,
நெல்லிக்காய் சாற ருந்து

நீங்காத சளியா? உந்தன்
நெஞ்சில் நிலைத்து விட்டதா?
தேங்காய் எண்ணெய் தனில்
கற்பூரத்தை சூடேற்றி உரிய
அங்கமதில் மெல்ல தடவி வா
அந்த நிமிடமுதல் குணமாகுமே!

வெந்தயத்தை நெய்யில் வறு,
வடிவாக சிறு தூளாக்கு,
வந்த வயிற்று வலிபோக,
மோருடன் அளவுடன் பருகு
அந்தக்கால அரும் மருந்திது
ஆசை வைத்துப் பழகு!

வேப்பம் பூவை உலர்த்தி
வெந்நீருடன் தூளாக்கி பருகிடு
ஏப்பம் நின்று போகும்
வாய்வும் விட்டுப் போகும்
செப்பிய இந்த மருந்தெலாம்
பாட்டி சொன்ன வைத்தியம்!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Dr. ஜலீலா முஸம்மில், ஏறாவூர்.

# ஆன்மீக அந்தஸ்த்து

மனிதர் யாவரும்
மகாவந்தஸ்த்து பெற்றிட
மண்ணுலக வாழ்விலே
மகத்தாக முயலல் வேண்டும்

அந்தஸ்து என்பது
அங்கீகாரம் தருவது
சமூகத்தில் மரியாதை
சங்கையுடன் உவப்பது

லௌகீக அடையாளம்
நிலையானது அல்ல
அலையாதே மானிடமே
உணர்வாயே சகோதரமே

ஆன்மீக அந்தஸ்த்து
ஆகிறத்தில் மேன்மை தரும்
நிரந்தர அடையாளம்
நித்தியமாய் வந்துசேரும்

கண்ணியமும் கருணையும்
காசினியில் உயர்ந்ததுவாம்
மரியாதை மன்னிப்பு
மறைசுவனத் திறப்புகளாம்

உயர்ந்த அந்தஸ்தின்
உன்னத சுவீகரிப்பாளன்
அர்ஷின் உரிமையாளன்
அல்லாஹு் சுப்ஹானஹு்
தஆலாதான்

இறைநம்பிக்கை போற்றிடுங்கள்
இஸ்லாத்தைக் கற்றிடுங்கள்
நல்லமல்கள் செய்திடுங்கள்
நற்பணிவோடு ஒழுகிடுங்கள்

வல்லோன் அல்லாஹ்
வாக்குறுதி அளித்துள்ளான்
வையகத்தில் இந்நான்கு
வகையினரை உயர்த்துவதாய்

இன்முகத்தோடு வாழ்ந்திடுங்கள்
இல்லறத்தை பேணிடுங்கள்
நற்குணத்தோடு நடந்திடுங்கள்
நாணயத்தை நிலைநாட்டிடுங்கள்

குறுகிய ஆயுளில்
கூடுதல் நன்மைகள்
இறையோனின் பேரருளில்
எத்தனையோ நற்கூலிகள்

தொடரான அமல்தனிலே
தூயவனின் பேருபகாரங்கள்
திடமான ஈமானில்
திளைத்திட்ட உத்தமர்கள்


அந்தஸ்த்தை உயர்த்திடவே
அடிபணிந்த உம்மத்தாய்
இறைபக்தி இதயம்நிரப்பி
ஏகனவனை வழிபடுவோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வித்தகர் சம்மாந்துறை மஷூறா,
மருதமுனை.



# நானும் ஒரு புழுவும்

நெரிசல் மிகுந்த பேரூந்தில்
அசௌகரியம் தருகிறது
அந்த அற்ப புழு.

வண்ணங்கள் சுமந்ததோர்
வடிவான புழுதான்.
எனினும் ஏற்க முடியவில்லை
அதன் அரிப்பு.

அதன் ஊர்தலில் அசூசையாகி
கூசிப்போகிறதென் மேனி.
பற்றிப் பிடிக்க முயலும்
எண்ணிக்கை தெரியாத
அதன் கால்களால்
தடயமாகிறது கீறல்கள்.

யாரேனும்
நசுக்கிவிடமாட்டார்களா
என்றதோர் நப்பாசையில்
உள்ளம் கிளர்ந்தெழ
பார்வைகளால்
ஆதரவு தேடுகிறேன்.

கண்ட இடத்தில் காலால்
அவசியமேயில்லாமல்
நசுக்கிவிட முடிந்த
அத்தனைபேர் முகத்திலும்
காணக்கிடைக்காத ஆதரவு
தந்து செல்கிறது ஏமாற்றம்.

யாரது ஆதரவும்
வேண்டியதில்லையென்ற
வீறாப்போடு துணிகிறேன்
நானே நசுக்க.
இனம் கண்டு
நகர்ந்து செல்கிறது
புழுவாய் அவன் பார்வை.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எம். ஏ. மாஹிறா (ஹில்மா)

# மறக்க முடியவில்லை

சொல்லம்புகளை பலரும்
பல் திசையில்
எடுத்து விசிறி...
இதயவறைகளை சிதைத்ததை
என்றுமே மறக்க முடியவில்லை.

சிதைந்து போன இதயமதில்
சில்லாங் கொட்டையாய்
சிதறித் தெறித்தது மனது...
அதில் நிம்மதி ஏதுமின்றி.

வலி தாங்க முடியாமல்
இதய வடுக்களை
வருடி வருடியே வாடி
வளைந்து விட்டது உயிர்
வாழ்வே பெரும்
போர்க்களம் என்று.

நிஜ வாழ்வியலில்
கொடுமையின் உச்சங்கள் பல
விரக்தியின் முடிவிடங்களே.

●




மலை முகடு அழகு
மலை அருவி அழகு
மரங்கள் அடர்ந்த வனம்
என்றும் அழகு.

புல்வெளி அழகு
அதனூடே வளைந்து
நெளிந்து பாயும் சிற்றருவி
இன்னும் பேரழகு எதையும்
ரசிக்கத் தெரிந்த மனிதர்க்கு.

இயற்கையோடு ஒன்றி
அதில் வாழும் உயிர்களும் அங்கு
அடிக்கடி வந்து போகும்
அழகிய பூச்சிகளும் பறவைகளும்
நல்ல மனிதர்களும்
என்றும் பேரழகுதான்
இயற்கையின் வனப்பினில்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எச். டீ. எச். பஹ்தா.

# சிட்டுக்கள் நாமே


சிட்டாகப் பறக்கும் சிட்டுக்கள் நாமே
மொட்டாக இருக்கும் பூக்கள் நாமே...

தரணியிலே தவழ்ந்து தரணியிலே
எழுந்து பார் போற்ற உயர்ந்து
பல படிகளைக்கடந்து துணிந்து
எழுவோமே...

மற்றோர் தூற்றிடினும்
உலகம் போற்றிடவே உன்னத
படைப்புக்களைப் படைத்து
நேர்மை, நீதி, நியாயம் என
நேர்வழியில் செல்வோமே...

ஈரம் இல்லா கயவர்கள் நடுவில்
வீரம் கொண்டு எழுந்திடவே பிஞ்சு
உள்ளம்படைத்த எமக்கு துணிச்சல்
எனும் தன் நம்பிக்கையை
படைத்திடுவோமே...

பாதாளம் நிறைந்த உலகிலே
பறவைகளாக பறந்திட
பாதைகளை வழிவகுப்போமே...



அன்பும், பண்பும் நிறைவாக
கிடைத்திட அனைவர் போலும்
மகிழ்ச்சியாக வாழ்ந்திட ஏழ்மை விலகி
அனைத்து உலக சிறுவர்களும்
நிம்மதி தோட்டத்தில் வாழ்ந்திடவே
நாளும் பிரார்த்திப்போமே...

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆஷிக் ஹுசைன்.
ஹெம்மாதகம.

# புனிதம் அடைவோம்.

மனிதம் என்றும் மறவாமல் காப்போம்

புனிதம் நாளும் புவியினில் சேர்ப்போம்

ஒருவர்க்கு ஒருவர் உறவாய் நிற்போம்

பிறருக்கு நம்மால் இயன்றதைச் செய்வோம்

இறைவழி நின்றே இன்னல் களைவோம்


துயரக் கடலில் அன்றாடம் ஓடிடும்

ஓடங்கள் ஆயிரம் என்பதை அறிவோம்

இன்பக் கரைகளுக்கு அழைத்துச் சென்றிடும்

துடுப்பாய் இருந்து அன்பைப் பொழிந்து

மனிதம் பேணிப் புனிதம் அடைவோமே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் எனக்கு பரிசளிப்பதாய்
எலி ஒன்றைக் கொன்று வந்து
காலடியில் போட்டுச் சென்றது எனது பூனை.
கண்களை மூடிக்கொண்டேன்.
பரிசெனினும் வலிகள் நிறைந்ததாயின் அவை வேண்டாம்
எனச் சொல்லிவிடமுடியவில்லை.
முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த
குழந்தைகளின் நடுவே கிடந்ததாகச் சொல்லி
மேசையில் கொண்டுவந்து வைத்துவிட்டுப்போனது வண்ணத்துப்பூச்சி.
நேற்றிரவு
அவளுக்காய் கொடுத்த முத்தமாய் இருக்கலாம்.
போகும் வழியில் எறிந்துவிட்டு அவள் போயிருக்கலாம்.
அவளின் கோபம், எனது இயலாமை
முத்தத்தில் தெரிந்தது...
இன்றிரவும்
எனது முத்தங்களை யாராவது
இப்படி எறிந்துவிட்டுப்போகலாம்...
எனது கவிதைகளைப் போல.

●




இந்த மரத்தை
அப்புறப்படுத்தப் போகிறார்கள்.
செடிகளும், அருகிருந்த மரங்களும்
பேசிக்கொண்டன.
காதலர்களும்,கவிஞர்களும்
கவலைப்பட்டனர்.
அதிக காலம் நம்முடன் வாழ்ந்திருக்கிறது.
அப்பா கவலையுடன் சொன்னார்.
அம்மா தன் வயதுத்தோழிகளுடன்
குந்தியிருந்து பேன் பார்த்து,
ஊர்க்கதைகள் பேசியதை நினைவுகூர்ந்தாள்.
அதன் பருத்த வெளிக்கிளம்பியிருந்த வேர்களுக்குள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிந்துவிளையாடி மகிழ்ந்திருந்ததை
அக்கா தன் மகனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள்.
இயந்திரம் வந்து
ஒவ்வொன்றாக சிதிலம் சிதிலமாக
உடல் அரிவதைப்போல அரிந்து கொண்டிருக்க
அப்பா கண்களை மூடிக்கொண்டார். அவருள்
உயிர்ப்புடனிருந்த குருதி கொப்பளித்திருக்கவேண்டும்..
உயிருடனிருந்த ஒரு உயிர் உயிரற்று இன்று
நம்மிடமிருந்து செல்வதைப் பார்த்து ஊரே அழுதது.

●




நடைப் பயிற்சிக்கு அழைத்தாள்.
மகளின் வேகத்திற்கு
நடக்க முடியவில்லை..
சிறுவயதில்
வளர்பிறை, தேய்பிறைக் காலங்களில்
போட்டி போட்டு
நடந்து வெற்றி கொண்டதாகப் பீற்றிக்கொண்டதும்,
வகுப்புத் தோழியிடம்
பந்தயம் கட்டி
பேச்சுப்போட்டியில்
வெற்றியீட்டியமையும் ஞாபகத்தில் வந்தது.
பின்னாளில்,
நண்பர்களுடன்
பந்தயம் கட்டி
பிரமிளாவிற்கு காதல் கடிதம்
கொடுத்தபோது தான் தோல்வியை உணர்ந்தேன்.
மறுநாள் திருமண அழைப்பிதழைத் தந்துசென்றாள்.
எல்லாத் தோல்விகளையும் கடந்துவந்தாயிற்று.
மனைவியிடம்,
இப்போது மகளிடம்,
நாளை பெயர்த்திகளிடமும் தோற்கலாம்.
இப்போதெல்லாம் வலிப்பதில்லை.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-செண்பகச் சோலையாள் ஆய்ஷ்.

# குறுகிய வாழ்வில்.



உதிர்வதும் மலர்வதுமாய்
குறுகிய வாழ்வின்
நெடிய பயணங்கள்

நிரந்தரமற்ற நிகழ் காலங்களாய்
காத்திருக்க நேரமின்றி
காற்றோடு காய்ந்து மறையும் சருகுகள்

கடந்தவை யாவும்
கண்ணாடியில் போல்
கண்ணெதிரே விம்பங்களாகும்

கடந்தகால நினைவுகள்
மீண்டும் மீண்டும்
மீட்டிட இதயம் நோகும்

நினைவுகளின் மீட்டல்கள்
புன்னகையும் கண்ணீருமாய் இங்கு
சிலர் வாழ்வில் புதுப்புது அத்தியாயங்கள்

பொய்யான உலகில்
உறவுகளும் பிரிவுகளும்
துளிர்த்தலும் உதிர்தலும் இறை நியதிதான்

நேற்றைய உறவுகள்
இன்றில்லை இனியில்லை நம்மோடு
என்றாகும்போது ஏதிங்கு நிரந்தரம்

இழக்க முடியா உறவுகளை
திடீரெனப் பிரிந்திட நேர்கையில்
இதயம் நொந்துடைந்து போதல் நிச்சயம்
வாழ்க்கை யென்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
என்பதும் அழகியதோர் அனுபவப் பாடல்தானே

வாழ்க்கை எனும் நாடக அரங்கில்
ஓர் அங்கமாய் எண்ணித் தொடர்ந்திட
'இதுவும் கடந்து போகும்...!!
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாஹிறா ஹமீட் அஸ்ஹர்.
கம்பளை.

# நீ நீயாகிரு!



உலகில் மானிடனாய்ப் பிறந்திட்ட நீ
உன்னத வாழ்வை இலட்சியமாகக் கொள்
அடுத்தவன் பார்க்க வாழ்வதை விடுத்து
அகிலம் போற்ற வாழ்ந்திட நினைத்திடு
குறிக்கோள் ஒன்றை மனதில் நிறுத்தி
அதனை அடைந்திடும் முயற்சியில் இறங்கிடு
ஏமாற்றிப் பிழைக்கும் கயமை வேண்டாம்
எண்ணத்தில் சிறிதும் குரோதம் வேண்டாம்
மாற்றான் தோட்டத்து மல்லிகை வாசத்தை
மறந்தும் நுகர்ந்திடும் எண்ணமும் வேண்டாம்
இருளும் ஒளியும் மாறி மாறி வந்து
தென்றலும் புயலுமாய் வாழ்வில் விளையாடும்
துவண்டு போய் சோர்ந்து விடாமல்
நிமிர்ந்து நின்று எதிர்த்துப் போராடு
தோல்விகள் தொடர்ந்து சலிப்படையச் செய்யும்
மனம் வலிமை இழந்து மறுதலிக்கத் தூண்டும்
எண்ணத்தில் பொதித்த வெற்றியை நோக்கி
வண்ணக் கனவுகளுடன் முன்னோக்கிச் செல்
வதனத்தில் புன்னகை அரும்பச் செய்து
கவனம் பிசறாமல் கரிசனம் கொள்
இலக்கை எட்டி இன்பம் கண்டால்
தலைக்கனம் அகற்றித் தரணியில் பயணித்திடு
உழைப்பின் உயர்வை உள்ளத்தால் உணர்ந்து
இல்லாதவர்க் கீந்து இறைதிருப்தி பெற்றிடு
அலைபாயும் மனதை அலைக்கழிக்க விடாது
அகிலத்தில் அனைவரையும் அரவணைத்துச் சென்றிடு
நாளையே நீ மரணித்து விட்டாலும்
உனதான அடையாளம் உலகை வலம் வரும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒலுவில் நழீம் ஹனீபா.

# பெத்தவள மறக்காதுன்னு ஏம்புள்ளகிட்ட சொல்லுராசா

பெத்தவள மறக்காதுன்னு
ஏம்புள்ளகிட்ட சொல்லுராசா

தவமாய் தவமிருந்து
ஆசையாய் பெற்றேனே

அவனுக்காக சுமந்த
வேதனைகள் எத்தனையோ

பிறந்தவனை அரவணைத்து
பாலூட்டி வளர்த்தேனே

நாளும் ஓயாது
ஓடி உழைத்தேனே

தியாகத்தோடு பாச
மழை பொழிந்தேனே

அறிவு புகட்டி
நல்வழி காட்டினேனே

மகன் கனவுகள்
நனவாக உதவினேனே

பதவியை அடைந்து
வளங்கள் பெற்றானே

பிள்ளை தாய்
உறவை மறந்தானே

வெறுத்து வேதனையை
பரிசாகத் தருகிறானே

கடந்த காலங்களை
முற்றாக மறந்தானே

நான் பட்ட
துயரங்களை மறந்தானே

வெறுப்பை விதைத்து
வேதனை அளிக்கிறானே

உண்மை உணர்ந்து
மகனே திரிந்திடு

அன்பான உறவாக
என்றும் மிளிர்ந்திடு

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முபீதா அமீன், அக்கரைப்பற்று.

# ஆழிப்பேரலையின் நினைவுகளோடு...



கரை தொட்டு ஓடியே அலையே
அன்று மனை வரை
வந்ததேனோ...?
ஆனந்தம் தந்த ஆழி அன்று
அழித்து விட்டு அடங்கியதென்ன.

விடுமுறை நாளென்று
வீதியெல்லாம் வந்தாயோ..?
பீதி கொண்டு ஓடிய போதும்
பாய்ந்து வந்து சுருட்டிக் கொண்டாய்.
பாவம் நீ பாவியென நினைத்து
விட்டாய்.

ஆண்டின் அந்தத்தில் ஆட்டம் காட்டி
ஆனந்தத்தை பறித்தெடுத்து
ஆயிரமாயிரம் ஆன்மாக்களைக்
காவு கொண்டாய்.

கதறியழுத கனமான நாட்களவை.
கண்ணை விட்டு அகலாத
காட்சியவை.
வருடாங்கள் பல்லாண்டாய்க்
கடந்து வந்தாலும்
மனதை வருத்திக் கொள்ளும்
நினைவுகளவை.

சுமை களைந்து சுகம் தந்த
நீயோ
அன்று சுனாமியென
கொடூரமாய் உருவெடுத்தாய்.
மறுமுகமாய் மாறி ஓடி
மறைந்தாய்.
சிங்காரமாய் சிரித்தெழும்பி
ஒரு நொடி சீற்றமென சீறிப்
பாய்ந்தென்னவோ...?

மீளாத் துயரதில்
மீண்டும் தண்டித்து விடாதே.
தாங்கிக் கொள்ளமுடியாத
தண்டனையவை.
●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்துவெற்றில் பிடித்தவை

## காய்கறிகள்

- சோலைக்கிளி.



ஊரில் உறைப்புக் கூடிவிட்டது
பச்சைத் தண்ணிபோன்ற
பிரதேசங்களுக்கு
ஊரவர்கள் சென்று வருகிறார்கள்

ஒரு நாள்
இரு நாள்
குளிருக்குள் இருந்துவிட்டு
வீடு வந்து சேருகிறார்கள்
குளிர் பதனப் பெட்டிகளிலும்
காய்கறிகள்
ஒருநாள் இருநாள்
குளிரில் இருக்கிறது

தக்காளிப் பழமும்
நெடிய கொச்சிக்காயும்
கொஞ்சம் கொஞ்சமாக
குளிர் பெட்டியிலிருந்து
வெளியேறும்

இவர்களும் காய்கறிகள்
ஆகிவிட்டார்கள்

குளிர் தேடிச் செல்லும்
இவர்களில் யார்
நெடிய கறிமிளகாய்
தக்காளி என்று
காய்கறிகளும் வினவும்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தல்

- தீரன்.

காலம் கௌவிக் கொண்டு வந்து
காலடியில் போட்ட
கவிதை இது.

குற்றுயிராய்க் கிடக்கிறது
குனிந்து தூக்குகிறேன்.

செதுக்கிச் செப்பம் செய்து
சிறகுகளும் சேர்க்கிறேன்.
தமிழ் உளியால்
விழி திறந்து
ஆன்மாவை அதற்குள்
ஆழமாய் ஊதுகின்றேன்..

ஆஹா,
அற்புதப் படைப்பாய்
அந்தரத்தில் சிறகடித்து
அது பறக்கின்றது.

அந்த அழகில்
உயிர்க்கின்றேன்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சினேகா மணிவேல்.
(இந்தியா)



# புரிதல்

வீட்டுடன்
சுவற்றுடன்
காற்றுடன்
மழையுடன்
புத்தகங்களுடன்
பேனாவுடன்
வானத்துடன்
மேகத்துடன்
நிலவுடன்
பூக்களுடன்
விலங்குகளுடன்
பறவைகளுடன்
இன்னும் எதன் எதனுடனோ
நன்றாக பேச தெரிந்த எனக்கு
ஒன்றை பேசினால்
மற்றொன்றைப் புரிந்துகொள்ளும்
மனிதர்களிடத்தில் மட்டும்
பேசவே தெரியவில்லை!

•


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செ. இராமதனவந்தினி.
(இந்தியா)

# நீ!



நீ!
என் மழை நாட்களின்
இருளை விழுங்கி
என்னை ஆர்ப்பரிக்க வைக்கும்
என் வனப்பான வானவில்

நீ!
என் வசந்த காலங்களின்
மிச்ச சொச்ச நினைவுகளை
பத்திரப்படுத்தும்
என் அமுதான தேனீ

நீ!
என் பின்பத்தை மட்டுமே
சுகமாக விழுங்கும்
என் வீட்டு நிலைக்கண்ணாடி

நீ!
நடுங்கும் குளிரில்
என்னை ஆரவாரம்
இல்லாமல் அரவணைத்து
ஒரு கோப்பையில் அன்பை தேக்கி
கசப்புகளை தனியே வடிகட்டும்
அன்பான தேநீர்...

நீ!
நான் என்பதை
அடிக்கடி நினைவு படுத்தும்
என் அழகான நினைவோடை!!

நீ!
நான்!!
நாம்!!!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து...




- வெண்ணிலா - இதழ் 15 வெளிவந்திருக்கிறது.

வெண்ணிலா சஞ்சிகையின் புதிய வடிவமைப்பும் அதன் அம்சங்களும் மிகச்சிறப்பாக உள்ளன. ஒவ்வொரு பக்கமும் வெவ்வேறு அம்சங்களுடன் பரிமாறி, வாசிப்பை சிறப்பிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக, புத்த வடிவமைப்பு கண்கவர் அழகுடன் சஞ்சிகையின் தகுதியை மேலும் உயர்த்தியுள்ளது. துறைசார் கட்டுரைகள், மற்றும் கதைத் தொகுப்புகள் மிக நேர்த்தியாக தேர்வு செய்யப்பட்டு, அவை வாசகர்களின் கவனத்தைப் பிடிக்கின்றன. சமகால பிரச்சினைகள் மற்றும் பாரம்பரியக் கலாசாரக் கூறுகள் அதில் அற்புதமாக இணைக்கப்பட்டுள்ளன. நம்மை விட்டுப் பிரிந்த கவிஞர்கள், எழுத்தாளர்களின் நினைவுகள் சிறப்பாக உள்ளன. கவிதைகள், நூல் வாசிப்புகள் அருமை சேர்க்கின்றன. ஒவ்வொரு பக்கமும் கலைத்திறன் மிக்க வடிவமைப்புடன் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சஞ்சிகையின் ஒளிப்படங்களும் வரைபடங்களும் வாசிப்பு அனுபவத்தை உயர்த்துகின்றன. எழுத்தாளர்களின் பங்களிப்பு புதுமையானது. அவர்களின் தனித்துவமான சிந்தனைகள், வாழ்வியல் அனுபவங்களை பிரதிபலிக்கும் விதமாக திகழ்கின்றன. ஒவ்வொரு கட்டுரையும் புதிய தளங்களில் யோசிக்க வைக்கின்றன.

வெண்ணிலா சஞ்சிகையின் எடுப்பும் உள்ளடக்கமும் மிகவும் நவீனமாகவும் கருத்துபூர்வமாகவும் அமைந்துள்ளதை நான் ஆழமாகப் பாராட்டுகிறேன்.

**- கவிஞர் டீன் கபூர்.**

- கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தும் வெண்ணிலா கவிதை மஞ்சரி.

மருதமுனை மண்ணில் இருந்து வெளிவரும் இலக்கிய பொக்கிஷமான வெண்ணிலா கவிதை மஞ்சரி சுமார் மூன்றரை வருடங்களாக இலங்கை தீவின் இலக்கிய உள்ளங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிறைவான இலக்கிய தாகம் தணிக்கும் ஓர் இலக்கிய மஞ்சரியாக காணப்படுகிறது.

ஓய்வு நிலை இலங்கை வங்கி உத்தியோகத்தரான கவிஞர், எழுத்தாளர் என பல்துறை ஆளுமை எஸ். ஏ. கப்பார் அவர்களின் முழு முயற்சியின் பலனாக காலாண்டுக்கு ஒரு முறை பிரசவிக்கப்படுகின்ற வெண்ணிலா கவிதை மஞ்சரி ஆனது தனது 15வது இதழை இம்மாதம் முதலாம் திகதி வெளியிட்டு வைத்தது.

இக்கவிதை மஞ்சரியின் முன்னட்டையில் தெற்கின் இலக்கியப் பொற்சித்திரம், பன்முகப் பெண் ஆளுமை வெலிகம றிம்ஸா முஹம்மத் அலங்கரிக்க பின்னட்டையில் றாசிக் நபாயிஸ் ஆகிய எனது 06வது நூலின் முன்னட்டையை பிரசுரித்துள்ளார் நூலாசிரியர்.

இதழின் உள்ளே பல்வேறு கலைஞர்கள் எழுத்தாளர்கள் கவிஞர்களுக்கு இடம் கொடுத் துள்ளார் ஆசிரியர். அந்த வகையில் எட்டாம் மாதம் மரணித்த கவிஞர் கல்முனை அபார் பற்றி ஆசிரியரிடமிருந்தும் சில வரிகளும் அட்டைப்பட கட்டுரை, தகவல், குட்டிக்கதை, இரங்கல், முகநூல் பதிவு, நூல் நயம், கட்டுரை, தடம் பதித்த மூத்த கவிஞர், புதிய வரவு, சிறுகதைகள், மஞ்சரி கவிதைகள், படித்தவற்றில் பிடித்தவை மற்றும் உங்களிடமிருந்து என பல விடயங்களை தாங்கியதாக இந்த இதழ் 80 பக்கங்களை கொண்டு வெளிவந்திருப்பது சிறப்புக்குரியது.

- மருதமுனை ஆவணக் காப்பக நிறுவனர், ஊடகவியலாளர், எழுத்தாளர்

**- றாசிக் நபாயிஸ்.**

• வெண்ணிலா சஞ்சிகை முதல் தடவை வாசிப்பிற்காக கைகளில் கிடைத்தது.

அழகிய அட்டைப்படம், வியப்பிற்குரிய சிறந்த ஆளுமை அறிமுகம் தாங்கி வந்திருக்கிறது அருமை.

ஒரு கலைஞராக இருந்து கொண்டு சக கலைஞரின் ஆளுமைகளை சமூகத்துக்கு பகிரங்கப்படுத்தும் நல் மனப் பாங்கு சஞ்சிகையில் பிரதிபலிக்கின்றது.

ஆசிரியர் பக்கத்திலேயே மறைந்த கவிஞரை பெருமைப்படுத்திய இரங்கல் குறிப்பும், பிரார்த்தனையும், மறைந்தாலும் கவிஞர்களை கௌரவப்படுத்தும் பண்பு, அவர்களின் படைப்புகள் மூலம் வாசகர் மனதில் வாழ வைக்கும் சிறந்த செயல்பாடு பாராட்டுக்குரியது.

உள்ளே...

மேலும் மூன்று மறைந்த கலைஞர்களுக்கான, இரங்கலும், பிரார்த்தனையும் கண்டு வியப்பு. இந்த விடயம் வேறு சஞ்சிகைகளில் காணக் கிடைக்காத ஒரு விடயமாகவே இருப்பது ஆச்சரியம்.

நூல் விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருப்பது எழுத்தாளர்களின் உள்ளத்தில் மேலும் ஒரு உற்சாக பிரவாகத்தை ஏற்படுத்தி நல்ல இலக்கியங்கள் படைக்க உந்து சக்தியாக தூண்டப்படும்.

அதிகமான சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பதும் கவிதைகளினால் அதிக பக்கங்கள் அலங்கரிக்கப்பட்டிருப்பதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பிரியர்களுக்கான பெருவிருந்து எனலாம்.

மறைந்த முதுபெரும் கவிஞர்களையும், அவர்கள் படைப்புகளையும் இளைய தலைமுறைகளுக்கு அறிமுகப்படுத்தி இருப்பதும்...

பல இளம் எழுத்தாளர்கள் வளர்வதற்கு களம் அமைத்துக் கொடுக்கப்பட்டு இருப்பதும் சிறப்பு.

அந்த வானத்தை தனது ஒளிக்கீற்றுக்களால் பிரகாசித்த வண்ணம் பவனி வரும் வெண்ணிலா போன்று...

அறிவொளியை பரப்பிய வண்ணமே இலக்கியவானில் என்றுமே பவனி வரும் இந்த வெண்ணிலா சஞ்சிகைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வெண்ணிலா வாசகி,
- **சித்தி மிஸ்ரியா அமீன்.**

- வெண்ணிலா 15ஆவது காலாண்டிதழ் கிடைக்கப் பெற்றேன். ஆனந்தம் அடைந்தேன். வெண்ணிலா அழகான வடிவமைப்பில் கண்களுக்குக் கவர்ச்சியாக அமைந்து வாசகர்களைக் கவரும் வகையில் அமைந்துள்ளதோடு அது சுமந்து வந்த அத்தனை ஆக்கங்களும் மிகச் சிறப்பு.

வெண்ணிலா இதழ் தொடராக வெளிவர தியாகத்தோடு பணியாற்றும் ஆசிரியரைப் பாராட்டுவதோடு, அவரின் உடல் ஆரோக்கியத்திற்கு இறைவன் அருள் புரிவானாக!

- **ஒலுவில், நழீம் ஹனீபா.**

- வேளைக்கு நீவருவாய்
வெண்ணிலவே என்று
நாளைக்கும் அக்கறையில்
நானிருப்பேன்...

- **அபூ முஜாஹித்.**

- வெண்ணிலா (வெண்பா)

நதிபோல ஓடும் நிலவேநீ வெண்மை
மதிபோல வந்து மனத்தோடு ஒன்றி
துதிபாட என்னில் துயர்போக்கி நின்று
புதிராக வாவெண் ணிலா.

கவிதானும் ஆக்கும் தருணம் மலர
புவிமீதில் ஓடம் எனக்காய் அமைந்திட
நாவினிக்கும் தேனாம் தமிழில் எழுதியதை
பாவிசைத்தேன் வெண்ணிலா வில்.
- **ஏ எம் கஸ்புள்ளா**


- தென்னிலங்கை இளம் எழுத்தாளர்களுக்கும் வாய்ப்பு வழங்கியுள்ள உங்களுக்கு என் பாராட்டுக்கள்! சிங்கள சமூகத்துடன் இணைந்து தமிழ்ப் பணி செய்யும் அவர்களையும் தூக்கிவிடும் உங்கள் செயற்பாடு மேலும் சிறக்கட்டும்.

- **சிரேஷ்ட ஊடகவியலாளர்,**
**பத்திரிகையாளர்**
**எம். ஐ. எம். முஸாதிக்**

- நான் அடையாளம் கண்ட முதன்மைத் தமிழ்ப் பல்துறை இலக்கிய, மற்றும் பன்நூலாசிரியர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்களுக்கு அட்டைப்படக் கட்டுரை எழுத சந்தர்ப்பம் கிடைத்ததில் மன மகிழ்வெய்துகின்றேன்.

- **கனல்கவி கவிமணி**
**அப்துல் றஸாக்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் இல. 281, பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் அச்சிட்டு ஜனவரி 2025இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அதன் மாகாணப் பணிப்பாளர் திரு. சரவணமுத்து நவநீதன் அவர்களின் அவர்களின் ஏற்பாட்டில் கடந்த 11-12-2024 அன்று திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்ற 2022, 2023, 2024ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண இலக்கிய விழா 2024இல் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இவ் விருது விழாவில், கிழக்கு மாகாணத்தில் 2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நூல்களில் இலக்கிய சஞ்சிகைத் துறையில் சிறந்த படைப்பாகத் தெரிவுசெய்யப்பட்ட வெண்ணிலா (கவிதை மஞ்சரி) சஞ்சிகைக்கு சிறந்த சஞ்சிகைக்கான விருதும் பாராட்டும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org